# எழுத்து

CONNEMARA ... 4 - JUN 1966 MADRAS

## மறுமலர்ச்சி இலக்கிய ஆய்வு
சி. கனகசபாபதி

## வெண்மலர்கள்
கி. அ. சச்சிதானந்தம்

## சிருஷ்டி இயக்கம்
தர்மூ சிவராமூ

## மூன்று பத்திரிகைகள்
ஏ. இப்ரஹீம்

## கவிதை குறித்து என் தீர்வு
ஜி. சங்கர குருப்

## உங்கள் காதுக்கு
சு. ச.

தமிழ் மறுமலர்ச்சி முன்னோடி



வ. வே. சு. அய்யர்
2-4-1881 – 3-6-1925

## கவிதைகள்
தி. சோ. வேணுகோபாலன், சி. மணி, ஹரி சீனிவாசன், ச. ச. குமார், த. நா. சீனிவாசன், மு. பழனிசாமி

ஜூன் 66 90 50 பைசா

8-ம் ஆண்டு
ஏடு 90
ஜூன்
1966

# எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா
19-A, Pilliarkoil Stree, Madras-5

தலையங்க குறிப்புகள்

## தமிழ் மாநாடு

கோலாலம்பூரில் உலகத் தமிழ் அறிஞர்கள் கூடி மாநாடு நடத்தி முடிப்பது நம் மொழிக்குக் கிடைத்துள்ள தனிப் பெருமை என்பதில் சந்தேக மில்லை. உலகின் பல்வேறு பாகங்களில் தமிழ் படிக்கும் ஆர்வம் வெகுவாகப் பரவி யிருப்பதை சமீப காலமாக நாம் உணர முடிந்திருக்கிற நிலை யில், இந்த மாநாடு மற்றுமொரு சான்றாகவே கொள்ளத்தக்கதாக அமைகிறது.

மாநாட்டு அமைப்பாளர்களுக்கும் அதில் கலந்து கொண்டவர்களுக்கும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பழைய வரி அடிப்படைச் சூத்திரமாக இருந்திருப்பதில் ஆச்சரியமில்லை, இந்த மனப்பான்மையின் உந்துதலில் பல ஆண்டு களுக்கு முன்பாக உலகின் பல பாகங்களுக்குத் தமிழர்கள் விரைந்து சென்று குடியேறி, இன்று அவர்கள் வரிசையாக ஒவ்வொரு நாட்டிலிருந் தும் கப்பல் கப்பலாகத் தாயகம் திரும்பிக் கொண்டிருந்த போதிலும், தமிழ் மொழியின் வீச்சு ஆங்காங்கு பதிந்து விட்டதை இனி அழிக்க முடியாது.

இந்த உணர்ச்சி நிலைக்கு அப்பால், மாநாட் டைப் பற்றி சாதனை ரீதியில் அணுகிப் பார்க்கும் போது சில உண்மைகள் தங்கி உறுத்துவதை மறைப்பதற்கில்லை. இவ்வளவு பெரிய மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய முழு விபரங்கள் நமக்குப் போதுமான அளவு கிடைக்கவில்லை என்பது முதல் குறை. அங்கு சென்று திரும்பி வந்தவர்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் பார்வையில் மாநாட்டைப் பற்றி விமர்சிப்பது நியாயம் தான் என்றாலும். பத்திரிகைகளில் வந்த அளவுக்கு, எதைப் பற்றிய பிரஸ்தாபம் இருந்தது என்று தெரிகிறதே தவிர, என்ன இருந்தது என்பது முழு மையாகக் கிடைக்கவில்லை.

அடுத்து, மாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும் பாலோர் தமிழ்ப் பேராசிரியர்கள், ஆராய்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள் என்று வகைக் கணக் கில் தோந்தெடுக்கப்பட்ட போதிலும், அசல் எழுத்தாளர்கள் என்ற பிரிவுக்கு முக்யத்வம் கொடுத்து யாரும் கலந்துகொண்டதாகத் தெரிய வில்லை, சர்வ கலாசாலைகள், அரசாங்கச் செய்தித் துறை, அகில இந்திய ரேடியோ என்றெல்லாம் சார்பு ஏற்கப்பட்டிருக்கும்போது தமிழ் எழுத்தா ளர் சங்கம், அகில இந்திய தமிழ் எழுத்தாளர் பெருமன்றம் போன்ற அமைப்புகளுக்கு பிரதி நிதித்வம் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை, அகிலன் கதைகள் பற்றிய பிரஸ்தாபக் குறிப்பு தவிர தற்கால இலக்கிய சர்ச்சை நடந்ததாக விவ ரம் எதையும் காணோம். அப்பால், கொஞ்சம் மனம் திறந்து சொல்லப் போனால், அறிஞர்கள் என்கிற அந்தஸ்தை விட அதிகாரிகள் என்கிற அடிப்படையே, தமிழ் நாட்டிலிருந்து சென்ற சுமார் ஐம்பது பிரதிநிதிகள் அடங்கிய தூது கோஷ்டியின் தேர்வுக்கு ஆதாரமாகத் தோன்று கிறது.

தமிழ் தெரிந்த வெளிநாட்டவரை அழைத்து வைத்து தமிழ் அறிஞர்களைச் சேர்த்து தமிழ் ஆராய்ச்சி அரங்கு கூட்டிவிட்டு. படிக்கப்பட்ட ஆங்கில மொழிக் கட்டுரைகளின் தமிழாக்கம் கூட இல்லாமல் செய்திருப்பது இன்னொரு குறை. தமிழ் மொழி, இலக்கியம் பற்றி தமிழிலே சிந் தித்து தமிழிலே விவாதம் நடத்துவது தான் தமிழ் மாநாட்டுக்குப் பொருத்தம். புரியாத சில ருக்கு புரியாத இடங்களில் விளக்கம் தருவதற்கு மட்டுமே வேறு தொடர்பு மொழி பயன்படுத்தப் பட வேண்டும்.

இந்தக் குறைபாடுகளைக் கவனத்தில் கொண்டு திருந்திய முறையில் திட்டம் வகுத்து, தமிழ் நாட்டிலேயே நடக்க இருக்கும் அடுத்த மாநாட்டில் செயல் முறைகள் தீர்மானிக்கப் படு மானால் பயன் உண்டு, இல்லாவிட்டால் 'செப் பித் திரிவாரடிகிளியே, செய்வதறிபாரடி' என்ற பாரதி வரியை நினைத்துக்கொண்டு நமக்கு நாமே சமாதானம் தேடிக் கொள்ள வேண்டியது தான்.

## வ. வே. சு. நினைவு

நமது முதுபெரும் தேசபக்தரும் பத்திரிகா சிரியருமான பரலி சு, நெல்லையப்பர் எழுதிய வரிகள் இவை ;

'சிறந்த தேசபக்தர்களாய் விளங்கிக் காலஞ் சென்ற சி சுப்பிரமணிய பாரதியார், வ வே. சு' அய்யர் இருவரும் வியப்பான மனிதர்கள். பாரதி சிறந்த கவியாகத் திகழ்ந்தார். ஐயர் சிறந்த கர்ம வீரராக விளங்கினார். இருவரும் எதிர்பாராத அகால மரணம் அடைந்தனர். சுப்பிரமணிய பாரதியின் கவிகளை உலகம் ஒருவாறு அறிந்து போற்றி வருகிறது ஆனால் சுப்பிரமணிய அய்யரின் செயல்கள் பலவற்றை உலகமே அறி யாது'

இது இன்றுவரைகூட எவ்வளவு உண்மை யாக இருக்கிறது! வ. வே. சு.வின் தேசபக்த செயல்களை தமிழகம் அறியாததோ அல்லது அறிந்துதான் புறக்கணிக்கிறதோ ஒரு பக்கம் இருக்கட்டும். தமிழ் மொழிக்கு இலக்கியத்துக்கு அவர் செய்திருப்பதையாவது அறிந்து கொண்டி ருக்கிறதா தமிழகம் சரியாக? பாரதியோடு சம காலத்தவரான வீரவிளக்கு, மகரிஷி என்றெல் லாம் பாராட்டப்பட்ட தமிழக முதல் புரட்சி தேசபக்தனான வ. வே. சு. பாரதிக்கு ஒரு ஆண்டு பிறந்து நான்கு ஆண்டுகள் பின் மறைந்தவர். (2-4-1881—3-6-1925) இந்த ஜூன் மாதம் மூன்றாம் தேதி மறுமலர்ச்சி இலக்கிய முன்னணி முன்னோடிகளில் ஒருவரான அவரது மறைவுநாள். அவரைப்பற்றிய நமது நினைவு நாள்.

# வெண்மலர்கள்

கி. அ. சச்சிதாநந்தம்

CONNEMARA ... LIBRARY
4 - JUN 1966

1

சொற்களால் வலே பின்னினேன்
பின்னி முடியுமுன் ஓடிவிட்டது அது

வண்ணங்களே வகைப்படுத்தி கலவைக்
குழம்பில்
கற்பனேத்தூரிகையை தோய்த்து எடுக்குமுன்
செய்மைக்குப் போய்விட்டது அது.

நரம்புகளின்மேல் விரல்களே ஓட்விட்டு
இசையில் பிடிக்குமுன் சென்றுவிட்டது அது

விண்ணுள் சென்றதா, மண்ணுள்
மறைந்ததா

என்னுள் பாலம் அமைத்தது காலம்

நடந்து சென்றேன்
அமைதிப்பாழில் அழகுக்கோலம் தந்தது அது

2

இருகரைகளிடையே நான் ஓட்டுகிறேன்
ஒளிமயமான லட்சியம்
கருமையான பிரத்யட்சம்
ஒளியிலும் நிழலிலும் நான் விளேயாடுகிறேன்
நான் விளேயாடப்படுகிறேன்
அகத்திலும் புறத்திலும் என் படகைச்
செலுத்துகிறேன்

3

காலத் துகளின் ஒளியிளே
நிணேவுப் பேழையில் பிடித்தேன்
கருமை கதவைத் தட்டியது
உள்ளிருந்ததால் மூச்சுத்திணறியது
வெளிவந்ததும் பேழை உடைந்தது
விண்ணதிர எழுந்தது எதிரொலியா
சிரிப்பொலியா?

4

என்னுள் நடந்ததும் நின்றதும் ஓடியதும்
ஒளியில் ஆடியதும் இருளில் அழுததும்
சிறை எழுப்பின சுற்றிச்சுற்றி
விடுதலே விண் தெரிகிறது
இசை முழக்கம் கேட்கிறது
சிறையினே தகர்த்தெரியும் உரிமைச் சம்மட்டி
எத்துணே கனம், தூக்கத்தான் முடிகிறதா?,

5

நிகழ்ச்சிகள் செத்தபாடில்லே
குற்றுயிராய் கிடக்கின்றன
நிணேவில் நெளிகின்றன
காலக்கல்லறை சேய்மையில் இருக்கிறது
நடந்துதான் ஆகவேண்டும்
ஓடமுடியுமா என்ன?

6

வானவில் வண்ணப் படிகளின் மேலேறி
விண்ணேத் தொட்டது உள்ளம்
மண்ணில் விலங்கிடப்பட்ட உடலோ
ஏளனமாய் நகைத்தது
சிரிப்பு விண் முழுதும் சிதறி எதிரொலித்தது
'அடிமையின்பச் சிரிப்பு'-உள்ளம் இரைந்தது
வாழ்க்கை முணுகிற்று.
உள்ளமும் உடலும் என் சிறைக்குள்
இருப்பது அவைகளுக்குத் தெரியவில்லேயே!

7

மையமோ ஒன்றுதான்
அதிலிருந்து அதிர்ந்து விரிந்து எழுந்து
ஓடித்திரியும் அலேகளோ
எண்களுக்கு அப்பாற்பட்டவை

மையம் இருக்குமிடம் உள்ளமா உயிரா?

தொடமுடியுமென ஏமாற்றும் அடிவானம்
போல்
அறிவுக்கையால் மையத்தைப் பிடிக்க
முடியவில்லே

நாட்கள் உடைக்கின்றன புறத்திலுள்ள
ஓடுகளே

புதிய ஓடுகள் வருகின்றன
மையம் இருக்கிறது அகப்படவில்லே

8

எனக்குள் எத்தனே பேர்கள்
ஒன்று இரண்டா மூன்று நான்கா...?

ஒருவன் சிரிக்க மற்ருெருவன் அழ
இன்ெனுருவன் விளையாடுகிருன்
நான் எத்தனை பேர்கள்?

ஒருவன் பல்லிளிக்க மற்ருெருவன் அன்பு
இன்ெனுருவன் துரோகம்செய்கிருன் காட்ட
நான் எத்தனை பேர்கள்?

ஒருவன் நட்புகொள்ள மற்ருெருவன் பகைக்க
என்னுள் எத்தனை பேர்கள்?

ஒருவன் தலைவனுக மற்ருெருவன் தொண்டனுக
இன்ெனுருவன் அடிமையாக
எனக்குள் எத்தனை பேர்கள்
ஒன்று இரண்டா, மூன்று நான்கா...?

## 9

காலத்தில் எதிர்நீச்சல் போட்டது நினைவு
நினைவின் மேல் சுமையாய் நான்.
இன்பத்தின் கரையில் ஒளி சிரித்தது
துன்பத்தின் கரையில் கருமை அழுதது
நிகழ்காலம் இழுக்கிறது, நினைவு விழுகிறது
வாழ்க்கை பழுக்கிறது.

## 10

ஆசைச்சுமையினை தூக்கிக்கொண்டு
நம்பிக்கை எழுந்து உயிரின்மேல் உலாவிற்று
எதிர்காலக்கரையின் கானல்நீர் பசுமையைப்
பார்த்தவண்ணம்
நிகழ்காலம் நெட்டுயிர்த்தது
இறந்த காலம் எதிரொலித்தது

## 11

நான் மற்றவர்களிடம் தேட
மற்றவர்கள் என்னிடம் தேடுகிருர்கள்
பல கோணங்கள், பல பார்வைகள்
கோணல் மாணலான அர்த்தங்கள்
அர்த்தங்களுக்கேற்ற ஆட்டபாட்டம்

திரை விழுகிறது எழுகிறது
காட்சிகளின் மாற்றம்
பகலில் சிரிப்பு இரவில் சூழ்ச்சி
காலக்கணக்கன் நாட்களை அளந்து
பங்கீடு செய்து போட்டான்
ஒவ்வொருவனுக்கும் தெரியாமல்
ஒவ்வொருவரும் போட்டனர் கணக்கு
போட்ட கணக்கு சரியா தப்பா?
கிடைத்த விடை எதுவானுலும் மாற்ற
முடியுமா?

## 12

இறந்த நிகழ்ச்சிகளுக்கு
உள்ளம் எழுப்பிய கல்லறையின்மேல்
காலம் செதுக்கிய சொற்களை
நினைவு படித்தது
பொருள்தான் தெரியவில்லை.

நினைவு சிந்தனையில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து
சிறகு விரித்துச் சேய்மைக்குச் சென்று
விட்டது
தங்கும் இடமும் இல்லை, பொருளும்
தெரியவில்லை.

## 13

போயாவிட்டாள் போயாவிட்டாள்?
பஞ்சில் நெருப்பை பரிவென்பதில்லாமல்
தூக்கி எறிந்து விட்டாளே, தூக்கி எறிந்து
விட்டாளே.

இதயத்தின் துடிப்புகள் நெஞ்சின் நெட்டு
யிர்ப்புகள்
நெடுவானில் ஒலித்தனவே
கேட்கவில்லையா அவளுக்கு கேட்கவில்லையா
அவளுக்கு

பூசை அறையின் புனித ஒளியினை
பரப்பிடும் விளக்கின் பருத்த சுடரினை
அணைத்தாவிட்டாள் அணைத்தா விட்டாள்?

உணர்ச்சிகள் பாய்ந்திடும் ஆசை
நறுமணத்துடன்
கற்பனை மலர்கள் கோலமாய் பூத்திடும்
இதயத் தோட்டத்தை
அழித்தா விட்டாள் அழித்தா விட்டாள்?

## 14

தொடக்கம் தூக்கி எறிந்தது
வெளிவந்தது நடுவின்மேல் விழுந்து ஆடிற்று
இது என்ன என்று கேட்டு இறுதியில்
முடிவினுள் ஒடுங்கிற்று வெளிவந்தது.

கேள்விக்கு பதில் என்ன?

தொடக்கமும் முடிவும் தொடர்ந்தும்
முடிந்தும்
நடுவை அலட்சியப்படுத்திச் செல்கின்றன.

## 15

நினைவுகள் உறக்கத்தினின்று எழுந்தன
அங்குமிங்கும் அலைந்து திரிந்து எழுப்பின
ஆரவார ஒலிகளை
எண்ணங்கள் அலையலையாய் சுழன்று சுழன்று
மோதின
என்னுள் தோன்றி என்னுள் அடங்கும்
வியப்பு!
நான் யாராம் மகனு மருமகனு அண்ணனு
தம்பியா

காதலனு, கணவனு, நண்பனு பகைவனு
தலைவனு தொண்டனு
இவ்வுறவு நூல்களால் காலம் நெய்த
வாழ்க்கையில் தேடினேன் என்னை
கேள்வியாய் பதிலாய் இரண்டானேன் நான்
இருளும் ஒளியும் தண்மையும் வெம்மையும்
மண்டிக்கிடப்பதிலாபுதைந்திருக்கிறேன் நான்
அதற்கும் அப்பால் உள்ளதா ஏதேனும்
இடம்?

இருக்கிறேனு நான் அங்கு?

### 16

கடந்தகால இடிந்த கட்டிடத்தில்
கால்மேலாய் தலைகீழாய்த் தொங்கி
தூங்கி இருந்த நினைவு வௌவால்கள்
சிறகை விரித்து சுருக்கி விரித்து அடித்தன.
உறங்கி இருந்தவைமேல் கல்லெறிந்த
காரணம்?

கும்பல் கும்பலாய் கிறீச்சிட்டு
நிகழ் காலத்தை பிறண்டுகின்றனவே
வேடிக்கை உனக்கு வேதனை எனக்கு
மண் சிரிக்கிறது என்னையும் உன்னையும்
பார்த்து

### 17

நான்...
நினைவுகளில் நம்பிக்கைகளில் கண நேர
மாற்றங்களில்
விருப்புகளில் வெறுப்புகளில்
துண்டிக்கப்பட்டு சிதைக்கப்பட்டு
சிதறடிக்கப்பட்ட
நான் ..
முப்பரிமாண காலக் கண்ணுடியில்
கோணல் மாணலாய் கூடியும் பிரிந்தும்
குறைந்தும் பெருத்தும்
பிரதிபலிக்கும் பிம்பக் கிறுக்கல்கள்
நான்...

### 18

காலம் இழுத்த நேர்கோட்டை வளைத்து
வளைத்து அழகழகான கோலங்களை போட்டுப்
போட்டுப் பார்த்தன ஆசைகள் அழித்து
அழித்துச் சென்றது காலம்.

காலம் ஓடின வேகத்தின் அதிர்ச்சியில்
அதன் காலடிச் சூரத் தேங்காய்களாய்
நினைவில் இருந்த பூசைப்படிமங்கள்,
வணங்கப்பட்ட படிமங்கள்
நொறுங்கி உடைபட்டன உடைபட்டன

கானல் நீரால் வளர்ந்துவிட்ட கனவுக்
காடுகளைக் கொளுத்திவிட்ட காலம்
உயிர்ப் பூச்சியின்மேல் கைவைத்தது.
செத்ததா உயிர்?
உடல்தான்டா சாகும் உயிருக்கேது மரணம்
புரியவில்லையா மறுபிறப்பு விளக்கம்?
புரிந்தாலென்ன புரியாவிட்டாலென்ன?

# தமிழ்நாட்டு வாசகர் பேரவை

## மதுரை

தமிழ் நாட்டின் இலக்கிய ரசிகர்கள், மற்றும் வாசகர்களை ஒருங்கிணைக்கவும் ரசனைத்திறனை வளர்த்துக்கொள்ளவும் சிறப்பான படைப்புக்களையும் படைப்பாளிகளையும் கௌரவிக்கவும், படைக்கப்பட்ட இலக்கியங்களின் புது, மற்றும் பொதுத் தன்மைகளை வரையறுத்து வகைப் படுத்துவதையும் நோக்கங்களாகக்கொண்டு "தமிழ்நாடு வாசகர் பேரவை" மதுரையைத் தலைமையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளதை அறிவிக்கப் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

இவ்வாசகப் பேரவையின் சார்பில் வரும் ஜூலைமாதம் 10-ம் தேதி யன்று (ஞாயிற்றுக் கிழமை) "தமிழில் விமர்சனப் பார்வைகள்" என்ற தலைப்பில், தமிழகத்தின் தலை சிறந்த விமர்சகர்களை அழைத்து ஒரு பெரிய கருத்தரங்கை மதுரையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அக்கருத்தரங்கில்:**

உரு - உத்திப் பார்வை (Form & Method of Presentation View); அலசல் பார்வை (Analytical View) சமுதாயப் பார்வை (sociological view) அழகியல் ரசனைப்பார்வை (aesthetic view) யதார்த்தப் பார்வை Realistic view); மரபுப் பார்வை (Traditional view); பட்டமுறைப் பார்வை (Academic view ஆகிய தலைப்புக்களில் தமிழ் நாட்டின் தலை சிறந்த விமர்சகர்களான. திரு. க. நா. சுப்ரமண்யம் திரு. சி. சு. செல்லப்பா, திரு. ரகுநாதன் திரு; சாலமன் பாப்பையா திரு ஜெயகாந்தன் திரு. எஸ். ராமகிருஷ்ணன், திரு. கனக சபாபதி ஆகியோர்களைப் பங்கு கொள்ளச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும். இக்கருத்தரங்கத் தொகுப்பை நூலாக வெளியிடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும் ஒரு வழிகாட்டுதலாக அமையும் ,இக் கருத்தரங்கைச் சிறப்பாக நடத்தவும், நூல் வெளியீட்டை வெளிக்கொண்டுவரவும், வாசகர் பேரவையில் இணைந்துள்ள இலக்கிய வட்டங்கள் மற்றும் வாசகர் வட்டங்களுடன், இணைந்துகொள்ள விரும்பும் புதிய வாசகர்களும் வாசகர் வட்டங்களும் பின் வரும் முகவரிக்கு நிதி சேகரித்து அனுப்பும்படி தெரிவிக்கப்படுகிறார்கள்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி : பொருளாளர் தமிழ்நாடு வாசகர் பேரவை, எஸ் கே. நிலையம், கீழ் அறை எண் 16, நாய்க்கர் புதுத்தெரு.மதுரை

சி. கன.கசபாபதி, எம். ஏ.,
தலைவர், த. வா. பேரவை & வரவேற்புக் குழு.

# சிருஷ்டி இயக்கம்

தருமூ சிவராமூ

எண்பத்தி நாலாவது எண் இதழில் 'படைப்பாளியின் மனநிலை பற்றி பிரஸ்தாபித்து எழுதியிருந்தேன் ஒருவகையில் அது மேலோட்டமான பேச்சுத்தான். "அவ்வழியில் அல்ல இவ்வழியில் எப்படியோதான்." என்று சரியான வழி தெரியா நிலையிலும் தப்புவழியைப்பற்றி அது தப்பான வழிதான் என்று நிச்சயத்துடன் சொல்கிறவன் பேச்சு. அத்தகைய வழிகாட்டுதலுக்கு எப்பவுமே மவுசு குறைவு. தெரிந்ததுதான். ஆனாலும் இம்மாதிரி காரியத்தில் ஒரு ருசி இருக்கிறது, வழி தெரியாதவனோடு வழிகாட்டியும் நின்று தடுமாறுவது...

அக்கட்டுரையில் சமநிறுவைபற்றி எதையோ சொல்லியிருக்கிறேன், 'ஆப்ஜெக்டிவ்' அளவைகள். குறைபாடானவை என்று. இந்த 'ஆப்ஜெக்டிவ்' ஆன, யாவருக்கும் பொதுவான அளவைக்கு அகப்படாத ஒன்றுதான் ஒரு கலைப் பொருளின் தார தம்மியத்தை நிறுப்பது என்கிற ஒரு முடிவு காட்ட முயன்றிருந்தேன். சங்கதி என்னவென்றால் கடைசியில் அம்முயற்சி வெறும் புஸ்வாணமாகிவிட்ட பிரமையளிக்கிறது: பொது அளவைக்குள் அகப்படாத அவ்வொன்றுக்கு 'படைக்கும்போது படைப்பாளி கொள்ளும் ஒருவித மனநிலை' என்று மட்டும் லேபல் ஒட்டிவிட்டு ஒதுங்கி விட்டேன். அந்த 'ஏதோ ஒன்று — "நன்றாயிருக்கிறது ஆனால் ஏன் என்று தெரியவில்லை" என்று தடுமாறவைக்கிற புகையுருவம். விமர்சனத்துறை பல்வேறு வகைகளில் செழித்துள்ள இன்றும் 'இல்லை, இவர்கள் இங்கு தீண்டவில்லை, என்று திரும்பி கலைப்பொருளுக்கே மனதை திருப்பி விடுவது:

**'The Milky way is like a silver river'** என்ற கவி வரியிலோ

'எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்' என்ற கதாசிரிய வரியிலோ மனம் மெய்யனுபவத்தைத் தேடுகிறதே — அங்கு விமர்சகன் தோல்வியடைகிறான். உண்மையில் அந்தத் தோல்வி தான் அவன் வெற்றியும்: வாசகப் பந்தை எகிறி ஆசிரியனிடைக்கே பிரதிபலித்துவிடும் சுவர்தானே அவன்?

இந்த படைப்பு வரிகளின் மர்மம் படைப்பாளியின் சிருஷ்டி மனநிலையில் தொக்கி நிற்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. எனக்கு மேற்குறிப்பிட்ட இரண்டு வரிகளும் அடிக்கடி உள்ளூர ரீங்காரம் செய்வதுண்டு. ரஷ்யாவிலிருந்து தப்பித்துக்கொள்ள தற்கொலை செய்த மாயாக்காவ்ஸ்கி என்ற கவி தற்கொலை செய்யுமுன் எழுதிவைத்த கவிதையில் ஒரு வரி ஒன்று. மற்றது மௌனி'யின் அழியாச் சுடரில்' ஒரு வசனம்.

இந்த இரண்டு வரிகளும் என் மனதை வட்டமிடுவதன் காரணத்தை ஆராய்வதன் மூலம் நான் போனதடவை ஏனோ தானோ என்று தொட்டுப் பார்த்து விட்டு நகர்ந்த 'சிருஷ்டி மனநிலை' பற்றி ஏதும் சொல்லலாம் என ஒரு சபலம். ஆனால் அக்கட்டுரையிலேயே சொல்லியிருக்கிறேன், சிருஷ்டி மனநிலை பற்றி நான் ஏதும் சொல்ல முயல்வதே. அதை ஒரு பொது நிறுவைக்கு வசப்படுத்தச் செய்யும் அபத்தமான யத்தனமாகும் என்று. ஆகவே வாசகர் என் எல்லையை ஞாபகத்தில் கொள்ள வேணும். நான் இங்கு அந்த சிருஷ்டி மனநிலை இதுதான் என்று சுட்ட முயலவில்லை. அது முடியாது என்பது என் அபிப்ராயம். ஆனால் அதுபற்றி, அல்லது அது மேற்குறிப்பிட்ட வரிகளிலிருந்து என்னைத் தொற்றும் வகைபற்றிச் சொல்ல முயற்சிக்கிறேன். இதன் உத்தேசம் ஒன்றே ஒன்றுதான் அதாவது சிருஷ்டி மனநிலை' என்கிற ஒன்று இருக்கிறது என்று ஸ்தாபித்தல். இதைச் செய்யாது விட்டால் என் முன் கட்டுரை அஸ்திவாரமற்றதாகும் எனப் பயப்படுகிறேன்.

The Milky Way என்பது எங்களது நக்ஷத்ர மண்டலத்தின் பெயர். இதைப்போய் ஒரு வெள்ளி நதிக்கு ஒப்பிட்டதில் என்ன கவிதை இருக்கிறது பிரமாதமாக என்று கம்பனின் கவி வரியில் ஒரு உவமையழகை ஒருவர் காட்டி வம்பு பண்ணலாம். நமது தமிழ் சமூகத்தின் கலாச்சாரச் சீரழிவின் வெளி விளக்கம்தான் அத்தகைய ஒருவர் பேச்சாகும். அவர் கம்பன் கவியையும்சரி இந்த ரஷ்யக் கவி வரியையும் சரி உணராதவர் எனவேண்டும். அதாவது, அவர் சிருஷ்டிமனநிலையை உணரவில்லை, அதனால் பாதிப்புப் பெறவில்லை என்கிறேன். ஒரு கவிதையின் நிரந்தரத்வம் அந்த சாகாத இயற்கை நிலையில் இருக்கிறது, கம்பனின் உவமைச் சிறப்பு' ரஷ்யக் கவியின் 'சாமான்ய' உவமை என்கிற சில மேல்தோல் அம்சங்களுக்கும் அடியில், படிமங்களின் இயக்க சக்தியில் உள்ளது அந்த இயக்க சக்தி என்ன செய்கிறது நமக்கு? The Milky Way is like a silver river என்ற வரியைப் படித்ததும் எனக்கு நடந்தது என்ன? ஒரு பிரமிப்பு!

இவ்வளவுதான்! ஆனால் இந்த பிரமிப்பு வெறும் அறிவு பூர்வான அதிர்ச்சியல்ல. உவமையின் 'சிறப்பில் கெட்டிக்காரத்தனம், வித்தை, 'இல்லையோவெனும் இடை' என்னும் அதீதத் தன்மைகளில் இல்லை, நம் பண்டித அளவு கோல்களின்படி உவமைச் சிறப்பு அதன் அதீத, (இயற்கையை விட்டு தூர விலகிப் போகிற) தன்மையில் உள்ளது. அவ்வகை உவமை வெறும் அறிவு பூர்வமான அதிர்ச்சியையே தரும். கெட்டித்தனமாகப்படும். ஆனால் பிரமிப்புத் தராது. உணர்வைத் தீண்டாது. (தொடர்ச்சி 137ம் பக்கம்)

# மறுமலர்ச்சி இலக்கிய ஆய்வு

## சி. கனகசபாபதி

### 1900—47

மறுமலர்ச்சியில் உண்டான மொழி மாறுதல் நம் மனசில் கொள்ளத்தகுந்தது. ஆங்கிலத் திறனாய்வாளர் ஜி. எச். மேர் என்பவர் ஆங்கில மொழி அதனுடைய பதினாறும் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் காலத்தில் லத்தீனமாக மற்ற ஸ்பானிய, இத்தாலிய மொழிகளைப்போல ஆகாமல் தடுக்கப்பட்டதை நல்லதுக்கு என்று கூறுயிருக்கிறார்.

தமிழில் மறைமலையடிகள் கருவியாக இருக்க உருவான தமிழ்த் தூய்மை இயக்கம் மறு மலர்ச்சிக் காலத்தில் தமிழ் மொழி மணிப்பிரவாளமாகவோ வட மொழிக் கூட்டாகவோ ஆகிவிடாமல் தடுத்தது: மறு மலர்ச்சி இப்படிப்பட்ட மொழி மாறுதலைத் தமிழுக்குக் கொடுத்திருக்காவிட்டால் குழப்பமே விளைந்திருக்கும்.

*1880—1900*—ல் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை பெருகியது. ஆனால் கல்வித்தரம் இல்லை, 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நாட்டில் அரசியல் எழுச்சி மலர்ந்தது. கல்வித்துறையிலும் கிளர்ச்சி நடந்தது. கல்வித்தரத்தை உயர்த்த முயற்சியும் நடந்தது. இப்படி மறு மலர்ச்சிக் காலத்தின் கல்வி மறுமலர்ச்சி பற்றிக் கூறப்படும் குறிப்பு இருக்கிறது,

இவ்வளவும் மறுமலர்ச்சியைப்பற்றி வரலாறும் மதிப்பீடும் திறனாய்வுக் குறிப்பும் கண்டு வருகிறபோது, அது செய்ய முடியாமல் போனதைச் சுட்டிக் காட்டலாம் என்று விரும்புகிறேன்.

மறுமலர்ச்சிக் காலத்திய சங்கயாப்பு முறையிலான பாட்டு நூல்கள் வெற்றி அடைய வில்லை,

வெ. ப. சுப்பிரமணிய முதலியாரின் 'அகலிகை வெண்பா' வும் ரா. இராகவையங்காரின் 'பாரி காதை' யும், சோமசுந்தர பாரதியாரின் 'மாரி வாயிலும்' போன்றவை.

### 2

சங்கப் பாட்டுக்களின் கலைத்திறனும் செவ்வியல் தோரணையும் உணர்ந்து ஆயப்படவில்லை மறுமலர்ச்சிக் காலத்தில். சங்கப்பாட்டுக்கள் என்றால் அவை உயர்ந்த சிந்தனைக்கும் நீதிக்கும் விருந்து என்ற பண்பாட்டு வரலாற்று எண்ணமே ரசனை ஆய்வுவழியைக்காட்டிலும் வலுவாகஅதிகப்பட்டு இருந்தது மறுமலர்ச்சிக் காலத்தில். உண்மையில் இலக்கியப் படைப்பான சங்கப் பாட்டுக்களை ஒரு பண்பாட்டுப் பார்வைக்கும் வரலாற்றுப் பார்வைக்குமே உட்படுத்தியது பொருத்தமல்ல.

ஒரு இலக்கியத்தில் 'அடிப்படை உண்மையை மட்டும் கண்டு உணர்ந்து வெளிப்படுத்திச் சொன்னால் போதும் என்று திரு. வி. க. கருதியிருக்கிறார்.

முச்சங்கங்கள் இருந்தன, தமிழுக்குத் தெய்வத் தன்மை உண்டு என்றெல்லாம் 'பழங்கதை கூறல்' மறுமலர்ச்சிக் காலத்தில் தெளிவு வராத நிலையையே குறிக்கும்.

கட்டுரை வரைவதில் ஒரு புதிய அணி அழகு முறை முந்தின தர்க்க முறையிலிருந்து பிரிந்து தர்க்க முறையையும் கொஞ்சம் தழுவிக் கொண்டு தோன்றியது. இப்படி மறு மலர்ச்சியில் தோன்றிய புதிய அணி அழகு முறை ஒரு சிலரிடம் அளவுக்கு மிஞ்சிப் போய் ஓசைக்கும் வெறும் அலங்காரத்துக்கும் பண்டிதச் சொல்லர்ட்சிக்கும் நிலைக்களமானது.

தமிழ்ப் பண்பின் சுயம்புவான ஆற்றலையும் பெருமையையும் மதிக்கிற மனநிலை ரொம்ப நல்லதுதான். இது மறுமலர்ச்சிகாலத்தில் எழுந்ததும் நல்லதுதான். இதனால்உலகில் மற்றவர்களைப்பார்க்கவே கூடாது என்பது சரியல்ல. தமிழில் பழயவை என்றால் அவை மட்டுமே போதும், புதுமையில் யாருக்கு என்ன வேண்டியிருக்கிறது என்ற தேக்க மன நிலையோடு எங்கோ ஒரு ஒரு இடத்தில் நின்று விடுவது அழகல்ல. மறுமலர்ச்சியில் இப்படிப்பட்ட தேக்க மனநிலை கூடவே சூழ்ந்து விட்டது திறனாய்வில் நமக்குத் தெரிகிறது.

ஆரியர் தமிழர் என்ற பிரிவினை மனப்போக்கு மறுமலர்ச்சியில் ஆகாத பிரச்னை.

நாவல் எழுதுவதும் படிப்பதும் எதுக்காக என்று அந்த மறுமலர்ச்சியில் திரு. வி க. குறித்தது சீலமும் அடிப்படை உண்மையும் மிகுந்த இலக்கியத்தை விரும்பியே என்று நன்றாகத் தெரிகிறது. அவர் விரும்பி எழுதியதுக்கு மாறாக நாவல்கள் தமிழில் பிறக்கத்தான் செய்கின்றன.

மறுமலர்ச்சி உரைநடையின் ஒரு பகுதி பழய இலக்கியங்களைப் பற்றியே எழுதப் பயன்பட்ட உரை நடைதான். மூலச் செய்யுள்களின் சொல்வளத்தைத் தழுவி உள்ளது மறு மலர்ச்சி உரைநடைப் போக்கு; செய்யுளின் ஓசையும் இலக்கணமும் வாக்கிய அமைதியும் பின் பற்றியது. கட்டுரைக்கு இப்படிப்பட்ட உரைநடைப் போக்கு பயன் பட்டதோடு சரிதான். அதிலும் பழய மீட்சி இயக்கக் காலத்துஉரை யாசிரியர்களுடைய 'பாட்டைப் போன்ற உரைநடை'ப் போக்கின் வழியில் கொஞ்சம் காலவகைக்குத் தக்க படி மாற்றி அமைத்துக் கொண்டது மறுமலர்ச்சி

உரைநடைப் போக்கு. அதுவே யாருக்கும் அந்த ஒரே விதமானதாக இருந்துவிட வேண்டும் என்ற கொள்கை அந்த மறுமலர்ச்சிக்காரர்கள் சிலரிடம் இருந்து உண்மை.

"இன்றைய மனிதப் பார்வையை, இன்றைய நோக்கிலிருந்து கணிக்கப்பட்ட மனித இயல்பை எடுத்துச்சொல்லப் போதிய சத்துக்கொண்டதாக மறுமலர்ச்சி உரை நடைப் போக்கு இல்லை'' என்று சி. சு. செல்லப்பா 1959 டிசம்பரில் எழுதியது திறனாய்வுக் குறிப்புள்ள உண்மை.

இந்தத் திறனாய்வுக் குறிப்பு எப்படி உண்மையாகுமோ அப்படியே மறுமலர்ச்சி உரைநடைப் போக்கிலான கட்டுரைக்கலை தர மதிப்பீட்டில் அழகுத் திறன் உடையது என்பதும். கட்டுரைக் கலையிலும் ஒரு சிலருடைய தேர்ந்தெடுத்த சில கட்டுரைகளையே தரமதிப்பீட்டுக்கே கொண்டு வர முடியும். திரு. வி. க. வின் 'எனது இலங்கைச் செலவு' உ. வே. சாமிநாதையரின் 'டிங்கினோ,' டி. கே சி. யின் 'கவியும் உருவமும்' மறுமலர்ச்சி உரைநடைப் போக்கிலான தமிழுக்கு இதுக்கு முன் இல்லாத புதுசான கட்டுரைக் கலைக்கு நல்ல உதாரணங்கள். இவை தவிர, சேதுப்பிள்ளையின் 'கடற்கரையிலே' கட்டுரை இந்தவகையில் மதிப்புடையது.

### 3

மறு மலர்ச்சிக் காலத்தின் கட்டுரைக்கலைக்கு ஒரு சிறப்பு இருக்கிறது போல, மறுமலர்ச்சிக் காலத்தின் இலக்கிய ஆய்வுக்கும் ஒரு சிறப்பு இருக்கிறது. அடிப்படை உண்மை ஆய்வு டி. கே. சி. கொண்டது. வரலாற்று நோக்கு ஆய்வு வையாபுரிப் பிள்ளையின் வழி ஒப்பீட்டு ஆய்வு திரு. வி. க. கண்டது. ரசனை ஆய்வு மறைமலையடிகள் உடையது.

வையாபுரிப் பிள்ளை பத்து ஆண்டுகள் (1936– 1946) கால ஆராய்ச்சியிலும் இலக்கிய ஆய்விலும் உழைத்தார். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் கூறிக்கொண்ட மறு மலர்ச்சிக் காலத்தில் வையாபுரிப் பிள்ளைதான் முதன் முதல் விஞ்ஞான முறையை இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன் படுத்தியவர். அவர் தமிழ் லெக்சிகனில் உழைத்தது காலம் மறவாத தொண்டு.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தமிழ் விழிப்பு நிலையின் அடிப்படையிலும், அதுக்கு மேல் சங்கச் செவ்வியல் இலக்கியக் கல்வியின் அடிப்படையிலும் மறுமலர்ச்சி எழுந்தது: விழிப்புக்காலம் சோதி இராமலிங்கரின் சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவித்தது, இராமலிங்கர் ஐம்பத்தோராவது வயதில் (1863) வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.

வடலூரார் சங்கத்தின் எதிரொலியாக மறுமலர்ச்சிக்காலம் மறைமலையடிகளின் பொது நெறிக் கழகத்தைத் தோற்றுவித்தது. மறைமலையடிகள் முப்பத்தைந்தாவது வயதில் (1911) பல்லாவரத்தில் அதை ஏற்படுத்தினார்,

அதே போல மறுமலர்ச்சிக்காலம் அன்னி பெஸன்ட் அம்மையாரும் திரு. வி. க. வும் (34 வயது) மற்றவர்களும் கூடிய சென்னை மாகாணச் சங்கத்தை (1917) யும் தமிழுலகுக்கு அளித்தது. அத்துடன் அப்போது நீதிக்கட்சியின் சீர்திருத்த இயக்கமும் செயல்பட்டது. சென்னைத் தொழிலாளர் சங்கம் திரு வி. க, வாடியா, சக்கரைச் செட்டியார், வரதராஜுலு நாயுடு முதலியவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

ஒன்றுக்கொன்று கருத்து வேறுபாடுகளும் போட்டிபூசல்களும் கொண்டு அந்த இயக்கங்கள் நடந்தது உண்மை. அன்று நடந்த கருத்துப் போராட்டம் மறுமலர்ச்சியின் வளர்ச்சி அம்சம். இன்றைய தற்காலத்தில் அரசியல் பெருங்கடலில் ஒன்றுகலந்து விட்டன சீர்திருத்த இயக்கங்கள். சோதியையும் மலையையும் தென்றலையும் காணமுடியாத கண்கெட்ட பாமரக் குருடர்களாய் உடல் தரித்திருக்கிறோம் இன்று நாம். காந்தியடிகளின் சீர்திருத்தக் கனவையும் மறந்து போன நிலைதானே நமக்கு.

### 4

சீர்திருத்த இயக்கம் மறுமலர்ச்சிக் காலத்தின் வளர்ந்த பயிர். இவ்வளவும் இங்கே இலக்கிய ஆய்வு நடத்துகிற இடத்தில் சீர்திருத்த இயக்கத்தைப் பற்றிச் சொன்னதுக்குக் காரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சீர்திருத்த எண்ணப் போக்கு மறுமலர்ச்சி உரைநடைப் பகுதிகளிலும் கட்டுரைகளிலும் அடிநாதமாகக் கலந்திருக்கிறது. மறுமலர்ச்சியின் ஊடே கருக்கொண்டு எழுந்த பாரதியின் தற்காலக் கவிதையிலும் கட்டுரைகள் கதைகளிலும் சீர்திருத்த எண்ணப் போக்கான குறிப்பை ஆழமாகவோ வெளிப்படையாகவோ பார்க்கிறோம். பாரதிக்குப்பின் பாரதிதாசன் என்றபடி பார்த்துக்கொண்டே வந்தாலும் அதின் மூச்சுக் கலப்பு இருக்கத்தான் செய்கிறது. பொதுவாகச் சொன்னால், சீர்திருத்த இயக்கம் தமிழ் இலக்கியத்துக்கு உரைநடையிலும் கவிதையிலும கேடு உண்டாக்கி விட்டது என்று மதிப்பிட முடியாது. அதனால் கெடுதலும் உண்டு என்றாலும் அது பெரிசு படுத்தக்கூடியதல்ல. சீர்திருத்த அறிவுறுத்தலாகவே செய்யப்பட்டுள்ள எந்த எழுத்தையும் கலை அளவில் தாக்கானது அல்ல என்று நிச்சயம் மதிப்பிட்டு விடலாம். பாரதி தருமபுத்திரனைக் குணம் மாற்றியதும், கண்ணன் பாட்டில் கண்ணனை ஒரு சீர்திருத்தமுள்ள சமூகவியல் உயிராகப் படைத்ததும் கலையளவில் தாக்கானது. பாரதிதாசனின் சஞ்சீவி மலைக்குச் சென்ற வஞ்சியும், புதுமைப்பித்தனின் சாப விமோசனம் பெற்ற அகலிகையும் சீர்திருத்த எண்ணப்போக்கில் கலையளவில் அழகுணர்ச்சியுடன் உருவான படைப்புக்கள். ஆனால் இன்னொரு பக்கம், பாரதி குவளைக் கண்ணன் போன்றவர்களைப் பாடியதும், பாரதிதாசன் தமிழியக்கத்தில் பலரையும் பற்றிப் பாடியதும் கலை மதிப்பீட்டில் உயர்வு பெற முடியாது.

5

நாம் பார்த்துவருகிற மறுமலர்ச்சிக் காலத்தைச் சார்ந்தவர்கள் பல்கலைக் கழகத்தின் 'பட்டமுறைக்காரர்' என்று தெரிகிறது. ஒரு சிலர் விதி விலக்காக மாறியும் இருப்பதைப் பார்க்கிறோம்; இருந்தாலும் அவர்கள் கூட முறையாகப் படித்தவர்களாகவே காணப்படுகிறார்கள்: இங்கே கடைசியாக அவர்களைப்பற்றி ஒரு வார்த்தை.

மறுமலர்ச்சிப் போக்கு பழம் பண்டிதப் போக்கிலிருந்து வேறு பட்டது. மறுமலர்ச்சிக் காலத்தில் பழம் பண்டிதப்போக்கு உடையவர்களும் இருந்தார்கள் என்பது மெய். ஆனால் அவர்களெல்லாம் கட்டுப்படுத்தி வைக்க முடியாத அளவுக்கே மறுமலர்ச்சி தமிழில் வீறிப் பொங்கி எழுச்சிகொண்டது. இதையே இன்னும் அழகாகச் சொல்ல வேண்டுமானால். மாரிக்காலத்துக் குகையில் கிடந்து உறங்கும் சீரிய சிங்கம் விழித்து வெளிவந்தது போலவே தமிழ் மறுமலர்ச்சியும். அந்தக் குகை போல் இருண்டு கிடந்த பழம் பண்டிதர்களை விட்டு வந்ததுக்காக மறுமலர்ச்சி வருந்தித் திரும்பிப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஒரு வேளை யாராவது சிங்கம் குகைக்கே திரும்பி வந்து படுத்துவிட்டது என்று கூறிவிடுவார்களோ? அப்படியும் சொல்லிவிட முடியாது என்று எனக்குப் படுகிறது.

திரு வி. க., மறைமலையடிகள், உ, வே சாமிநாதையர், டி. கே. சி. வையாபுரிப்பிள்ளை, பாரதியும் தான் ஆகியோர் மறுமலர்ச்சிப் போக்கு உடையவரா அல்லது பழம் பண்டிதப் போக்கு உடையவரா என்று இதைப் படிக்கிற நீங்களே சொல்லுங்கள். இவர்கள் நீங்கலாக மறுமலர்ச்சி இலக்கியத்தை உங்களால் மதிப்பிட முடியுமானால் பாருங்கள். பழம் பண்டித எதிர்ப்பு நானும் உடையவன்தான் டி. கே சி. யைப்போல. பாரதியைப்போல அந்த அளவுக்குப் பண்டித எதிர்ப்பு எனக்கு என்று கூறிவிடலாமா என்று தோன்றுகிறது. இந்த இருவரில் பாரதி இதைவெளிப்படையாகடி கே சி யைப்போல் தன்எழுத்தில் பன்னிப் பன்னிக் காட்டிக்கொள்ளவில்லை பழம் பண்டிதம் பிற்போக்கானது என்று காண்கிற நான் மேலே பெயர் சொல்லிய மறுமலர்ச்சிக்காரர்களின் போக்கையும் பிற்போக்கானது என்று மதிப்பிட மாட்டேன்.

6

கீழே சில வாக்கியங்களை எடுத்துத் தருகிறேன். இவை ஒரு பொறுப்பும் படைப்புத்திறனும் உடைய பேனாக்காரர் எழுதியவை. இவ்விடம் என் கையில் பேனாவை வேணுமென்றே நான் கூராக்கவில்லை.

''நடையிலும் சரி, விஷயத்திலும் சரி திரு, வி க. வுக்குப் பக்தர்களும் சிஷ்யர்களும் அதிகம், ஆனால் அந்த ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்ததற்குக் காலத்தின் திருப்பத்தையே சொல்ல வேண்டும்.''

''அவர் எழுத்து அதிக நாள் நிலைக்காது என்பது நிச்சயம் என்றே எனக்குத் தோன்றுகிறது. தமிழ் வசன நடையில் ஒரு திருப்பத்தில் முக்யம் வாய்த்தார் என்பது தவிரத் திரு. வி. க. வுக்கு இலக்கியச் சிறப்பு எதுவும் சொல்வதற்கில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.''

''அந்தப் (மறைமலையடிகள்) பாதிப்பு நல்ல தற்கல்ல என்று சிலரும், நல்லதற்குத்தான் என்று இன்று பலரும் விவாதிப்பார்கள் என்றும் சேர்த்துக் கொள்ளலாம்,''

''அவரைப் (சாமிநாதையர்) பழந்தமிழ் இலக்கியத்தின் பிரதிநிதியாக மட்டும் நாம் கொள்வது பொருந்தாது,''

---

# என்றோ

## ஹரி. சீனிவாசன்

விண்ணேறும்
வெண் கழுத்துக்கருடன்
மண்ணடியில்
குடையும் நெளியும்
பழுப்புப் புழுவாய் வழியும் வளையும்
குருட்டாட்டம் போடும்.
எடையற்ற தூசு
லேசாய்
என் மனத்தை அழுத்தும் இறுக்கும்
நெருக்கும் கனக்கும்.

குளிர் காய வந்த சிறு நெருப்பு
சாட்டைப் பிழம்பால்
கையைச் சுட
கை வாயைச் சுட
வாய் வயிறைச் சுட
வயிறு உயிரைச் சுட
உள்ளம் பளபளக்கும் கருக்கும்.

வழ வழத்த
பளிங்குக் கல் தரையும்
யாத்ரீகன் நாடாச் செருப்புக்கால்
நாட்டி வைத்த நிமிடம்
புதை மணலாய் சேறாகி
ஆள் விழுங்கும் மலைப்பாம்பாய்
சக்கரப்பல் வாய் பிளந்து
சட்டக்கால் நாச் சுழற்றி
உறிஞ்சும் உள்ளிழுக்கும்
ஊன்றக் கை வைத்தால்
வழுக்குப்பாசி
மூக்குடைந்து செங்குருதி
வடிகாலாய் ஓட
மூக்கில் நெய்ப்பந்த மணம் நெடிக்கும்
என்றோ இந்நனவு கனவாகும்?

"இலக்கிய நயத்துடனும் அமைதியுடனும் டாக்டர் சாமிநாதையருடைய நினைவுக் கட்டுரைகள் நமது முன்னோர்களை (அதாவது சமீப காலத்திய முன்னோர்களை) நாம் அறிந்து கொள்வதற்கான அரிய பொக்கிஷமாக உதவுகிறது."

"இந்த இடைக்காலத்தை நமக்கு இவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டுகிற வேறு தமிழ் நூல்கள் இல்லை என்றே சொல்லவேண்டும். சாமிநாதையரின் என் சரித்திரமும் நமது சரித்திரத்தில் சென்ற நூற்றாண்டைப் படம் பிடித்துக் காட்டுகிறது"

மேலே பெயர் சொன்ன மூவரும் மறுமலர்ச்சிக்காரர்கள், இவர்கள் எழுதிய உரை நடையின் பாதிப்பையும் இலக்கியச் சிறப்பையும் சிறு குறிப்பாக மதிப்பிட்டு வரைந்தவர் க. நா. சுப்ரமண்யம்.

க. நா. சுப்ரமண்யம் காலத்தின் திருப்பத்தையே திரு. வி. க. வின் உரைநடைக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்ததற்குக் காரணம் என்று கூறுவதை ஒப்புக் கொள்ளலாம், ஆனால் அதே திரு. வி. க. வின் உரைநடை காலம் கடந்தும் வந்து இன்றைய நமது தற்காலத்துக்கும் கட்டுரைக் கலையில் சொல்லுருவங்கள் செதுக்கப் பயன் படத்தான் செய்கிறது.

காலம் தான் திரு. வி. க. வை உரைநடையை அப்படி உண்டாக்கவைத்தது என்று க. நா. சுப்ரமண்யம் மதிப்பது முழுக்கவும் சரியில்லை. திரு. வி. க. உரை நடையில் ஒரு சோதனைக்காரர். பேச்சு நடைப் போக்கை இலக்கிய நடையில் கலந்தார். சிறு சிறு வாக்கிய அமைப்பிலே இலக்கிய நயத்துடனும் அமைதியுடனும் பேச்சும் சிந்தனையுமாகச் செதுக்கி எழுதினார்.

திரு. வி. க. வின் மறுமலர்ச்சிக் கட்டுரைகள் செவ்வியல் கலைப் போக்கானவை. செவ்வியல்கலை என்றால் தெளிவு, வன்மை, நேர்முக எடுத்துக் கூறல் ஆகிய முக்குணங்கள் சிறப்பாக இருக்க வேண்டும். இவை மூன்றும் நிரம்பியது திரு. வி. க. வின் கட்டுரை நடை என்பது ஒன்றால், அவர் எழுத்து அதிக நாள் நிலைக்காது என்று க. நா. சுப்ரமண்யம் மதிப்பது குறைந்த மதிப்பீடே ஆகும்:

இனி அடுத்து மறைமலை யடிகளின் மறுமலர்ச்சிக் கால உரைநடையை எப்படி மதிப்பீடு செய்யலாம் என்று பார்ப்போம், மறைமலையடிகளின் உரை நடைப்பாதிப்பு நல்ல தற்கல்ல என்பது க. நா. சுப்ரமண்யம் கருத்தாகத் தெரிகிறது, அது தமிழ் வளர்வதற்கான நல்ல வழி நடை என்று சொல்ல இயலாது என்பது தான் அவர் அபிப்பிராயம்.

இங்கு இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளலாம். மறைமலை யடிகளின் உரை நடையைப் பின்பற்றி அப்படியே எழுதினால் அந்தத் தமிழ் முற்காலத்ததாகப் போய் நின்று தற்காலத்ததாகத் தோன்றாது. அப்படியானால் மறைமலையடிகள் எழுதிய உரை நடையை முற்காலத்தது என்றே மதிப்பிடலாமா என்ற ஒரு கேள்வி எழுகிறது, முற்காலப் பழைய உரையாசிரியர்களின் தோரணைதான் அதுக்கும் உண்டு. அத்துடன் ஓரளவு மறுமலர்ச்சித் தோரணையும் கலந்திருக்கிறார் மறைமலை யடிகள். பேச்சுத் தோரணையை அவர் ஏற்றுக் கொள்ளாததால் அவருடைய உரைநடை பழந்தமிழ் இலக்கியத்தின் சாயலானது என்றே மதிப்பீடு செய்யத் தக்கது. ஆனால் ஒரு வரலாற்று நோக்கு ஆய்வில் மறை மலையடிகளின் பாதிப்பு நல்லதுக்குத்தான் நடந்தது என்று காண்கிறது உண்மை. முந்திய மணிப்பிரவாளத்தையும் தமிழ்த் தூய்மை என்ற விடுதலையையும் மனசில் கொண்டு பார்த்தால் தான் இந்த உண்மை புரியும்.

திரு. வி. க , மறைமலையடிகள், சாமிநாதையர் ஆகிய மூவரும் மறுமலர்ச்சிக் காலத்தின் சிறப்பு உறுப்பினர்கள். திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புகள் சாமிநாதையரின் 'என் சரிதம்' போலவே இலக்கியச் சிறப்பு வாய்ந்தது.

இவர்களில் 'மறுமலர்ச்சியின் கடைசி முதிய வர்' திரு. வி. க. அவர் அந்திக்கால ஆறு ஆண்டுகளில் பாடிய சில பாட்டுக்கள் மறு மலர்ச்சித் தோரணையைக் காட்டிலும் தற்காலத் தோரணை பெற்றுள்ளன. அவை அறிவுறுத்தலாகவும் இருக்கலாம். அது வேறு சங்கதி. ஆனால் அவை தற்காலத் தோரணை பெற்றுள்ளதால், திரு விக. வை 'மறுமலர்ச்சியின் கடைசி முதியவர்' என்று மதிப்பிடுவது போலவே 'தற்காலத் தோரணையின் இளைஞர்' என்றும் ஆய்ந்து உணரலாம்.

---

# காலம்

## மு. பழனிசாமி

நிற்கின்றேன் என்றென்றும்

''வருவேன். மலர் சுமந்து,
மணம் சுமந்து வருவேன்;
மையகற்றி,
கண்ணின் கருமணியில்
ஒளியேற்றி வருவேன். '
சோம்பி பார்ப்போர் பலர்

' சென்று விட்டேன்;
விளையாடி ஓடிவிட்டேன்;
மை யேற்றி,
நுண்நரம்பு நீள் தண்டில்
வளைவேற்றி ஓடிவிட்டேன்
தேம்பி நிற்போர் அங்கே.

கருமையா ?
கருமணியில் ஒளியா?
பேர் சுமையா ?
நீள் தண்டில் வளைவா?
நாளை யென்றார்.
நேற் றென்றார்,
இன்றே யென்றேன்.
நிற்கின்றேன் என்றென்றும்.

# கவிதை குறித்து என் தீர்வு

## ஜி. சங்கர குருப்

[கேரளத்தில் மகாகவியாக போற்றப்படும் ஜி. சங்கர குருப் இந்தியாவின் 14 மொழிகளிலும் 1920 லிருந்து 1958 வரையுள்ள கால கட்டத்தில் மகத்தான சாதனை புரிந்த இலக்கியாசிரியரைக் காணும் முயற்சியில் காசி. பாரதீய ஞான பீடம் முயன்ற நிலையில் பாரதீய மகா கவியாக சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு லட்ச ரூபாய் பரிசு பெற்றுள்ளார். இந்த இலக்கியப் போட்டியில் கலந்துகொண்ட நூல்கள் (1) அக்னி வீணை - (வங்காளி) கவிஞர் நஸ்ருல் இஸ்லாம். 2· பங்குதி சணகாக (கன்னடம் டாக்டர். ஸ் பி. குண்டப்பா. 3 (வேயிபடகலு) (தெலுங்கு) வி. ஸத்யாரண்யா (4) ஓடக் குழல் (மலையாளம்) கவிஞர் ஜி. சங்கரகுருப்.

(ஓடக்குழல்) புல்லாங்குழல் என்ற ஜி. சங்கர குருப்பின் கவிதைத் தொகுதி ஒரு லட்சம் ரூபாய் பரிசைப் பெற்றது. அறுபது கவிதைகள் கொண்ட தொகுதி இது. 1950 ல் மாத்ருபூமி பிரசுரம் வெளியிட்டது 1963 ல் மூன்றும் பதிப்பு கிடைத்து விட்டது. பி. என் பட்டத்திரி – ஹிந்தியில் மொழி பெயர்த்தார். மிஸ். பி. பி. மேரி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்,

1901 ஜுன் மாதம் 3-ம் தேதி கவிஞர். ஜி. பிறந்தார். கேரளத்தில் கவிஞரை 'ஜி' என்றுதான் மக்கள் அழைக்கிறார்கள். பள்ளிஆசிரியராய்வாழ்வைத்தொடங்கியவர் கவிஞர் ஜி. கல்லூரிப் பேராசிரியராய் உயர்ந்தார். 1956 ல் பென்ஷன் பெற்று ஓய்வு பெற்றார். பதினைந்து கவிதைத் தொகுதிகள். மூன்று மொழி பெயர்ப்புக்கள் நான்கைந்து கட்டுரை நாடகத் தொகுதிகள். இரண்டு நாவல்கள் பள்ளிக்கூடப் பாட நூல்களாக ஏராளம் ஓயாமல் எழுதியவர். ஜி. அறுபதைத் தாண்டிவிட்ட கவிஞர் ஜி. சிறந்த இலக்கியச் சொற்பொழிவாளரும் கூட. மலையாளத்தில் கடும் கண்டனங்களுக்கும் எதிர்ப்புக்கும் ஆதரவுக்கும் பரிவுக்கும் ஆளான கவி இவர். பத்து வருடங்களாக கடுமையாக விமர்சனங்கள் செய்யப்பட்ட கவியும் இவரே. விமர்சனத்துக்காகவும் கவிதைக்காகவும் இவர் 'திலகம் என்ற இலக்கியப் பத்திரிகை ஒன்றை நடத்தி வருகிறார் கடந்த ஐந்து ஆண்டுகளாக. கவிஞர் கவிதை பற்றி தன் தீர்வு இது என்று சொல்லாமலே சொல்லுகிறார்.]

---

கவிதை குறித்து என் தீர்வு! அல்லவா! இலக்கிய விமர்சன முனைக்கு என்னையும் தேடல் நிகழ்ச்சிக்கு கொண்டு வந்து நிறுத்தி இறுக்கியிருக்கிறீர்கள். அப்படித்தானே கவிதை எது? கவிதை எதற்காக? எதற்காகத்தான் எழுதுகிறேன்? எதற்காக கவிதை? எதற்காகக் கவிதை படிக்க வேண்டும்?

இலக்கிய விமர்சனம் கொஞ்சம் ஒளி வீசியிருக்கின்றன இந்த விஷயங்களில் என்று நினைக்கிறேன். எல்லாம் துலங்கிவிட வில்லை. சில பாகங்கள் மட்டும். இலக்கியத்தில் தேடல் முனைப்பு தான் பெரியது. தேடித் தேடி சேரச் சேரத் தேட வேண்டும். இந்தத் தேடல் தொடர்ந்தும் பெரும்பாலும் தோல்வி முனைகளையே காண முடிகிறது. கற்பனையின் துணையோடு பாவ உணர்வுகளின் அலையோட்டங்களுடனும் இந்தத் தேடல் தொடர்கிறது. முனைப்பு உந்துகிறது. தினமும் ஒரு கவிதையை கவிதையாகக் கண்டுவிட முடிகிறதா? கவிதையைக் கட்டியாள வருகிறதா ?தன் அன்புச் செல்வமான குழந்தையை கட்டியாள யசோதை முயற்சித்தாளே— அது போலல்லவா கவிதையைக் கட்டி யாள்வது? ஆனல் கவிதையிடம் பெறும் தோல்விதான் எத்தனை ஆனந்த மயமான ஒன்று! அபிமானம் மாறாத அந்த நிலையும் பெரியது தான்.

இன்றைய இலக்கிய உள் உலகில் கவிதைக்கு எதிர் காலம் இல்லை. சந்தமயமான கட்டு நிறைந்த பழைய கவிதை வழிகளுக்கு தூக்கு கயிறு கொடுத்தாகி விட்டது. என்ற சப்தம் முழங்கிக் கொண்டிருக்கும் காலம் அல்லவா இது? கதையும் நாவலும் தான் கவிதை என்ற பிரசித்தியும் கிளம்பி விட்டது என்பது உண்மை. கதை தான் கவிதை என்றால் கவிதைக்கு எதிர்காலம் இல்லை யென்றால்- கதை இன்மையைப்பற்றி நம் வாதம் இடம் மாறும். எனவே கவிதைக்கு எதிர்காலம் இல்லை என்றால் சந்தக் கவிதைக்கு மரபுக் கவிதைக்கு என்று கொள்வோம் இந்த இடத்தில். ஆக சந்தம் ஓசை இவை இன்று அவசியம் இல்லையா? யோசிப்போம். எட்மண்ட் வில்ஸன் தான் என்று நினைக்கிறேன் அப்படிக் கேட்டது. 'is verse a dying technique' சில விமர்சகர்களிடையே அவர் காரசாரமாக இந்த கேள்வியை தொடுத்து எறிந்தார்.

வசன காவியம்— காவியம் ஆகாது என்றோ கதையை உட் கொண்டு காவியம் எழுதும் எழுத்தாளர்கள் காவிய கர்த்தாக்கள் ஆகமாட்டார்கள் என்றோ விமர்சகர்கள் விவாதித்ததாக எனக்குத் தெரியாது கவிதையிலும் உரை நடையிலும் உருவமும் அழகும் கவிதை உணர்வும் தத்துவ உணர்வும் பரந்த நூலுணர்வும் அடர்ந்து கலந்து தெரிய வேண்டும் என்று சிந்தித்து தனக்குத் தானே போதப் படுத்திக் கொண்டிருந்த ஒரு கவிஞன் இங்கு பிறக்க வேண்டிய அவசியமோ நிர்ப்பந்தமோ இருந்ததில்லை. இங்கு கவிஞனும் அவன் படைப்பும் இயற்கையாகவே அமைந்தன.

கவிப் பயிரை வளர்க்க வேண்டிய நிலையின்றி கவிதையாகவே வளர்ந்தன. 'காதம்பரி' எழுதிய பாண பட்டனை கவிஞனாகத்தான் இன்று வரை பாரதம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. காளிதாச சாகுந்தலம் உள்ளடக்கிய கதை கவிதை யாகத் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. செம்மீன் ஒரு காவியமும் அடுத்[illegible]. சுந்தரிகளும் சுந்தரன் மாரும் ஒரு மஹாகவி[illegible]ம் ஆகாது என்று யார் விவாதிக்கிறார்கள்! விவாதிக்க முடியும்? நாவல்-நாவலிஸ்ட் என்ற சொற்களின் நாவல்ட்டி தகழி யையும் உரூபையும் கவந்து விட்டது நிருபர் களும் பத்திரிகை ஆசிரியர்களும் பதிப்பாளர் களும் அவர்களை நாவலிஸ்டுகளாகவே அறிமுகம் செய்து வெளியிட்டார்கள். உட் பொருள் இது தான் என்றால் இதில் குழம்ப என்ன இருக்கிறது என்றால் அதுதான் கஷ்டம். வாழ்க்கை அனுபவங் களின் உயிரோட்டமும் விசித்திரங்களும் உணர்ச் சிகளும் மொழி வடிவத்தில் ரூபம் ஏற்றுப் பிறப் பதே கவிதை அல்லது காவியம் எல்லாம். இவை களை ஏற்றுக்கொள்ளாத கவிகள் இல்லை, ரஸிகர் கள் இல்லை, விமர்சகர்களும் இல்லை.

(செம்மீன்-தகழி சிவசங்கரப்பிள்ளை மலையாள எழுத்தாளர் எழுதிய நாவல். சுந்தரிகளும் — சுந்த ரன்மாரும்-உரூப் மலையாள எழுத்தாளர் எழுதிய நாவல்.)

கற்பனை பிரதிபலிக்கும் வாழ்க்கையின் ஒளியோ விளக்கமோ இனி காவிய உரை நடை யில் தான் இருக்க வேண்டும் என்பதும் தனிக் கவிதைகள் இறந்து கொண்டிருக்கின்றன என்ப தும் அறிவு பூர்வமான முடிவாய்த் தோன்ற வில்லை. பதினெட்டாம் நூற்றாண்டு ஆங்கில இலக் கிய உலகில் உரை நடையுகம். உரை நடைதான் அன்று முன் நின்றது. போப் எழுதிய 'எஸ்ஸே ஆன் மான்' என்கிற கவிதைநூலை கவிதைநலிந்த உரை நடை என்று சொல்லப் படுகிறதே!

In poets a true genius is but rare
True taste as seldom is the critic's share

என்ற இவ்விரண்டு அடிகள் ஞாபகம் வரும் போது உரைநடையின் பிரும்மாண்டமான நிழல் தெரிகிறது. எந்தத் துறையிலும் எங்கும் வியா பித்து நிற்கிற அதன் சக்தி நிலையும் இன்றைய சாதனையும் தட்டுப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கவிதைகளில் கனவுகள் பிறந்தன. கவிதையின் குங்குமம் பூத்த பாதைகள் அப்படித் துலங்கின. பின் தன் சந்தலய அழகுகளை வசனத் துக்கு கொடுத்து விட்டு வசனத்தில் துலங்குகின் றனவோ? ஒரு இலக்கிய உருவம் இப்படித்தான் மாறி வளர்கிறது- என்று இலக்கிய உருவத்தின் மாற்றங்களை வளர்ச்சியின் அசைவுகளை புள்ளி குத்தி குறிப்பிட்டு; இப்படித்தான் இந்த இலக்கிய வடிவம் மாறும்— என்று வாதிப்பதில் அர்த்தம் இல்லை- பயனும் இல்லை. கவிதை இப்படித்தான் உரை நடையாய் வளர்ந்தது என்று கூறுவது கதலிவாழைப்பழம் வளர்ந்து தான் நேந்திர வாழைப்பழம் ஆகியது என்பது போல சிறு பிள்ளை பேச்சுத்தான்.

கற்பனை, நடப்பு, அனுபவம் இலக்கிய பலமும் வேகமும்; வெளியீட்டுத் திறன், அதற்கான துணிவு நிர்ணயம் காத்திருப்பு ஆகிய பல அம்சங் ளின் மானசீகமான அழுத்தத்தின் சுயத் தன்மை தான் அதன் உள் ஆழத்தையும் அதன் உருவத் தையும் உறுதி செய்கிறது தாகுரின் காபுலிவாலா பாவ ரீதியாக காவியப் போக்கில் உரை நடையில் எழுதிய கவிதைதான். தேவதார் க்ராஸ் என்கிற கதை லய மதுரமான கவிதையில் தான் உறுதி செய்யப்படுகிறது. பிரசித்திபெற்ற சிறு கதை யாசிரியர் காரூர் நீலகண்டப்பிள்ளைஅந்தக்கவிதை மாத்ருபூமியில்வெளிவந்தபோதுஎனக்குஎழுதினார் இவ்வளவு அழகான பாவரீதியான கவிதையின் விஷயத்தை உரை நடையில் சொல்லவே முடி யாது என்று. வாழ்க்கையை வெளியிட்டுக் கொள்ள, வாழ்வில் கிட்டும் ஞானத்திற்கு உரை நடைபோலவே கவிதையும் உதவும். கவிஞனின் பார்வை பயன் பட்டு பயன் தரவே தரும் கவிதை யில் அதுவும் மரபு வழிகளை இன்றும் பின் பற்று வதால் சில கஷ்டங்கள் இல்லாமல் இல்லை. கவிஞ னின் இன்றைய நிர்ணயங்களுக்கு ஈடு கொடுக்கும் படி அவை சில நேரங்களில் இல்லாமல் தயங்சி விடுகின்றன. இல்லை என்று கூறவில்லை- உரை நடையில் மட்டும் இந்த தொல்லை நிலை இல்லை என்று கூற முடியுமா? ஜீவன் நிறைந்த வாழ்க்கை யை மொழியின் துணையோடு பிரகாசிப்பிக்கிற சினிமாக் கலையைவிட நின்ற இடத்தில் அப்படியே நின்று ஒரு நிமிஷத்தின் பாவத்தை சித்தரித்து விடுகிற சித்திரக்கலை மேலல்லவா. என்றாலும் அந்த சித்திரம் ஒன்று சித்திரக் கலையின் முழுமை யைக் காட்டிவிடுமா? முடிவை இறுதியைப் பிடித்து நிறுத்தி முடித்துவிடுமா? அது மாத் திரம் அல்ல. கவிதையோ ஓவியமோ சிற்பமோ இன்னும் எந்த ஊடகத்தின் வழியும்வாழ்க்கையை பூரணமாக வெளிப்படுத்தி விட முடியும் என்று தோன்றவில்லை- பூவின் உள்ரகஸ்யத்தை இனிய மணம் என்னும் லய மதுர பாஷையில் இளங் காற்று பிரகாசிப்பிக்கின்றது. பூவின் நிறத்தை யும் வடிவினையும் ஸ்பரிசமா பாஷை வடிவில் எட்ட முடிகிறது. உருவ பாஷை வடிவில் எட்ட பூவின் மற்ற அம்சங்கள் பூவைப் பற்றிய சுய சைதன்யம், தத்துவம் உள் உணர்வு இவ்வளவும் அவசியமாகிவிடுகிறது. அத்தனையும் உள்ளத்தைத் தொடும்படி எட்டச்செய்வதுதான் பெரும் பணி. எழுபதாவது வயதில் ஓவியக்கலையினூடே தன் சுய அகமன வெளியீடுகளை உருவாக்க முயன்று வந்த ரவீந்தரநாத் தாகூர் சொன்னார் 'சப்தம் மௌன மகாசமுத்திரத்தில் வெறும் குமிழிகள் மட்டும்தான் மொழியால் வெளியிடமுடியாத பாவங்கள் உண்டு ஏராளமாக; என் சித்திரங்கள் என் மன நிழல்கள் ஆகும்— மனசின் சாயைகள் ஆகின்றன. ஜடம் போன்ற ஓர் நிலையை- அறிவும் உணர்ச்சியின் சிலிர்ப்புகளும் அடைந்து இறுகி விடாதபடி, மனிதனின் அகப்புற நிலைகளை மேலும் கீழுமாக ஆத்மாவை சாந்தப்படுத்தி முத்தமிடுகின்றன எந்தக் கலையும். அது கலையாவ தும் அப்போது தான்''.

உள் மன பாவங்களின் உணர்வலைகள்; கற்பனையின் அசைவுகளின் சீறல்கள்; வெளியீட்டு வேக முனைப்பின் திருப்பங்கள்; இவைகளின் கூட்டு மொத்தமான உரு ஒழுங்கான வெவ் வேறு பட்ட கதியில் இயைவது தான் ரிதும். நாட்டியத்திலும், சிற்பத்திலும், ஓவியத்திலும் சங்கீதத்திலும், இலக்கியத்திலும்– எல்லா கலைகளிலும் இதன் சம்பூரணமான ஆட்சி பல விகிதத்தில் உண்டு Significant form என்று க்ளைவ் பெல் நிர்ப்பந்தித்துள்ள இந்த அம்சம் உரை நடைக்குப் பொருந்தாது என்று வாதிப்பார்கள் என்று தோன்றவில்லை.

உரைநடை மொழியின் அழகுகளையும் பொருளையும் ரசனையையும் சொற்களின் இட ஏற்ற தாழ்வுகளையும் எடுத்துக் காட்டி இலக்கிய ரீதியில் பிரகாசிக்க வேண்டும். மனோபாவத்தை எட்டக் கூடியதாய் அமைதல் வேண்டும். சந்தமயமான காவிய உருவில் மொழி சங்கீத மண்டலத்தில் பெற்ற ஸ்வரங்கள் மாத்திரைகள், சொல்லின்-எழுத்தின் வர்ண பேதங்கள் எதுகை மோனைச் சுண்டல்கள் எல்லாம் கூடி மொழியில் சங்கமிக்கின்றது என்னலாம்.சந்தம் பிறப்பதுஇங்கேதான். இலக்கியம்; உண்மையைத் தேடிப் போகிற ஆன்மீகத் தேடல், சக்தியை வேண்டி நிற்கிற ஊக்கம்- இரண்டும் கொண்ட ஒரு யோகியாகும். சந்தம் என்கிற அப்ஸரஸ் பல முறை அவன் உறுதியைக் கலைக்கிருள்- அவன் கனவிலும் நினையாத உறவுகள் அவனுடன் அவனுக்கு ஏற்பட்டு விடுகின்றன அது இயற்கையாய் இயைந்து வருகிறது.

"சங்கீதத்தை அறவே விட்டு ஒதுங்கிப்போய் விடுவது கவிதைக்கு என்றுமே நல்லதல்ல'' என்று சொன்ன கவிஞன் எஸ்ரா பவுண்ட் இந்த சந்தமயமான காவிய மேடையின் இந்த சக்தி விசேஷத்தை உணர்ந்திருக்கிருர் என்று தோன்றுகின்றது. உணர்ச்சிகளை ஆண்டு பாவத்துடன் ஒலி மயமாக வெளிப்படும் போதுதான் சந்தம் சிறக்கின்றது இவைகளை; எல்லாம் ஆண்டு வெற்றியுடன் பவனி வரும்போதுதான் எங்கோ தோன்றி தானறியாது வந்து கலந்து பட்டுநூல் இழைபோல் சுற்றிக் கொண்டு கிடைக்கிறது உருவம். ஒரு கவிதை இன்று எழுத வேண்டும் என்று பிளான் போடுவதும் அதற்காக ஒரு கதை தேடி அலைவதுமாய் 'கவிதை செய்யும்' 'கவிஞர்கள்' லய மோகினியான சந்த தேவதையை காணவும் அறியவும் எட்டவே முடியாதவர்கள்.

இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வரும் போது நாதப்ரும்மத்தின் அனுபூதியில் திளைத்த பாடகன் அதை புதியதொரு ஸ்வரமாய்த் தன் இதயத்தில் ரூபம் கொண்டதென்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இரவிலிருந்து பகலுக்கு நடக்கும் ஓவியன், நிழலின் தன்மையையும் நிறத்தின் தன்மையிலும் கோடுகளின் தன்மையிலும் ஆக தன் இதயத்தில் அந்த அனுபவ விசேஷத்தினை ஸ்பரிசிக்கிருன். வால்மீகியின் சோகம் சுலோகமாய்ப் பீறிட்டது நினைவில் முட்டுகின்றது. ஒவ்வொரு கலைஞனுக்கும் சுவாதீனமான தன் இச்சை வடிவத்தை கலையாக வெளியிடும் முன்பு. தார்மீக அதுவரை அறிந்ததாகப் புழங்கி வந்துள்ள ஊடகத்தின் (மீடியம்) மூலம் மட்டுமே தன் ஆத்ம வெளியீட்டை நடத்துவது இயல்பாகும். மனதின் தாளத்தையும் லயத்தினையும் வெளியிடும் போது. ஒளிரச்செய்யும் போது கலா ஊடகத்தின் (மீடியத்தின்) சுயத்தன்மை சில மாற்றங்களை ஏற்க வேண்டிய நிலை வந்து விடுகின்றது. பாவ வெளியீட்டின் நிலையான வசனத்தை விட பாவ வெளியீட்டின் நிலையான கவிதையில் ரிதும் அதிகமாகி விடுவதன் காரணம் இது தான் என்று எண்ணுகிறேன்.

எழுத்தச்சனின் கிளிப்பாட்டுகளில். பௌராணிகமாய்த்துலங்கும் ஒரு கால கட்டத்தின்; பௌராணிகமான ஒரு தார்மீகமான தேசத்தின் ரிதும் என் காதுகளை எட்டுகின்றன. சிருஷ்டித் தொழிலின் பிணிப்புகளையும் நான் அங்கு கேட்கிறேன். அந்த பழைய கவிதைகளில் தொடங்கிய கவிதை வாழ்வு இன்று வரை நீண்டுள்ளது. அந்த பழங்கவிதை நல்கிய புதிய லயங்களும் அகங்களும் வழக்கமான ஆலாபனை ரீதியான கவி வழியைக் கொடுத்து அது நடப்பாகியது. பாவ ரீதியான புது வழிகளை எட்டக் கூடிய முன் நடப்பை அது தராவிட்டாலும் ஊக்கு வித்தது. சந்தம் புல்லாங்குழலாகும் கவிதையை பாவ ரீதியான உள் வளர்ச்சியும் இசைவடிவத்தையும் கொடுத்து வளர்த்தது சந்தம். சக்தியும் பாவமும் உண்மை ஒளியும் கவியின் உணர்ச்சி மயமான தீர்மானத்தால் கிடைக்கின்றன அவன் கவிதைக்கு.

என் காவியத்தைப்பற்றிய தீர்வைப் பற்றி நான் இங்கே பேச வில்லை. கவிதையைப் பற்றிய என் தீர்வு அதற்கு ஒரு முகவுரை தான்.

(ஜி. எம். எல். பிரகாஷ் மொழிபெயர்த்தது)

---

# எங்கிருக்கிறோம்

## தி. சோ. வேணுகோபாலன்

புராணத்தில் பழுத்த பண்டிதப் புலி
தன் பத்து வயதுப் பையனின் பாட புத்தகத்தில்
நீரின் இரு மூலகத்தை மின்சாரத்தால்
தனித் தனியாக்கும் தகவலைப் படித்து நகைத்தார்

'அந்தக் காலத்தில் அற்பப்பறவையும்
பாலையும் நீரையும் பிரிக்குமே என்று
நிகழ்கால நித்திரைக்கு பழங்கால கொட்டாவி
விட்டார்
ஆராய்ந்து பார்க்க ஆசைப் பட்டாலும்
அன்னமும் பாலும் அகப்படவில்லையே

# மூன்று பத்திரிகைகள்

## ஏ. இப்ராஹீம்

இது வாசகன் யுகம். எழுத்தாளர் களுக்குள் உண்மைகளைப் பரிமாறிக் கொள்வதற்கு வேண்டிய தெம்போ, நிறை குறை பற்றிய விமர்சனங்களை சகிப்புடன் ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்ளும் பொறுமையோ அற்றுப் போன நிலையில் வாசகன் பொறுப்பு முன் இடம் பெறுகிறது. இந்தப் பரிசிலனை கூட, எழுத்து, தீபம், தாமரை ஆகியவற்றைப்பற்றிய ஒரு வாசக மதிப்பீடுதான். இப்பத்திரிகைகளைப் பற்றிய இந்த ஆய்வின் நோக்கம், தமிழில் ஒரே வார்த்தையில் சொல்லி விளங்க வைக்க முடியாத, துரதிர்ஷ்ட வசமாக, தொல்காப்பியன் காலத்திலேயே நமக்குப் பழக்கமாகியிருத ஒரு கலை பற்றியதாகும். ஆங்கில நாகரீகத்தின் இறக்குமதிகளுள் ஒன்றுன 'எடிட்டிங்' கலைபற்றியே இங்கு குறிப்பிடுகிறேன். நீள, அகலத்தையும் உருவத்தையும் நிர்ணயிப்பது முதல், எந்தெந்த பகுதிகளை இணைக்க வேண்டும் அவை என்ன நோக்கிலும், தரத்திலும் இருக்க வேண்டும், அவற்றுள் எதற்கு முன் இடம் அளிக்க வேண்டும், எதற்கடுத்த இடத்தை 'அதற்' களிக்க வேண்டும் என்பன போன்ற பல் வேறு தொழில் நுணுக்கங்களை உள்ளடக்கிய வார்த்தை 'எடிட்டிங் என்பது. இதை, இதே அளவு விரிந்த பரந்த பொருள் தரக் கூடியதாக எந்தச் சொல்லால் தமிழ்ப் படுத்திக் குறிப்பிடுவது என்று எனக்கு விளங்க வில்லை. பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுக்கும் டீச்சருக்கும் ஆசிரியர் என்று கூறி, அதே மூச்சில் எடிட்டருக்கும் ஆசிரியர் என்று கூறி மொழிக்கு வளம் தேடித்தந்து பழகி விட்ட நமக்கு எதையும் தமிழ்ப் படுத்துவது அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை தான். ஆனுல் டீச்சர் மற்றும் எடிட்டருக்கு போடப்பட்டுள்ள புதிர் போல எடிட்டிங்கிற்கும் தொகுத்தல், அமைத்தல் என்று வரையறுக்கப் பட்ட பொருள் தரக் கூடிய சொற்களைக் கொண்டு புதிர் போடும் புண்ணியம் எனக்காக வேண்டாம் என்பதற்காக 'எடிட்டிங்' என்ற சொல்லை அப்படியே கையாள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

எனவே தமிழகத்தில் இலக்கியத்துக்கு என்ற உணர்வால் உந்தப்பட்டு, சாண் ஏற முழம் சறுக்கிய போதிலும், நம் உள்ளத்தில் என்றும் சாகா வரம் பெற்றுவிட்ட இம் மூன்று சஞ்சிகைகளையும் பற்றிய எடிட்டிங் கலையைத்தான் நான் வாசகன் என்ற கோணத்தில் இருந்து பார்க்கிறேன் என்பது தெளிவு. ஆயிரக் கணக்கான வாசகர்களுள் ஒரு துளியின் இம் மதிப்பீடு, சம்பந்தப்பட்ட 'எடிட்டர்' களுக்கு உடன்பாடா இல்லையா என்பது வேறு விஷயம். அது வாசகனுக்கு சம்பந்த மில்லாத விஷயம். இனி விஷயத்திற்கு வருகிறேன்.

முதலாவதாக எடுத்துக் கொண்ட மூன்று பத்திரிகைகளுமே நீள அகலத்தில் கூட ஒரு மைப்பாடில்லாதவைகள். இவைகளுக்கு நோக்கத்தில் மட்டும் அது இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது சொல்லப் போனுல் ஒன்றைப் போல ஒன்று பிரதி எடுக்கும் வேலையில் இறங்காமல், ஒன்றின் வாசகனைப் பிரித்துத்தான் இன்னென்று தன்னை வாழ வைத்துக் கொள்ள வேணடும் என்ற நப்பாசை நிலையை மேற் கொள்ளாமல், க நா. சு. வின் 'இலக்கியவட்டத்'தின் அற்பஆயுசுபோல அல்லாமல்-தனித்தன்மையுடன் இயங்குவதே சிறப்பு தமிழில் இம் முயற்சிபோக இனனும் எம் முயற்சிவேண்டும் என்பதை தேடிக்கணித்து, ஆளுக்கு ஒரு துறையை பிரதிநிதித்துவம் வகிக்கின்றன இம் மூன்று பத்திரிகைகளும் தனிப்பாதை வகுக்கும் இம்முயற்சிக்கு தமிழ் பத்திரிகை உலகில் வித்திட்டவர் சி. சு. செ. தான். செல்லப்பாவின் "எழுத்து" தமிழுக்கு முன் உதாரணம் அற்ற ஒரு துணிச்சலான முயற்சி தாமரைக்கு ஒரு சரஸ்வதி, போட்டுச் சென்ற தடம் இன்னும் பல வருடங்களுக்கு வழி காட்ட முடியும். 'தீபத்திற்கோ இடையில் திசை மாறிச் சென்றுவிட்ட கலைமகள், அமுதசுரபி ஆகிய பத்திரிகைகளின் பூர்வ காலப் பணி ஆதர்சமாக இருக்கிறது. (ஆனுல் வளர்ச்சி பெற்று விட்ட கலைமகளுக்கு கிடைத்த நிலை தான் தீபத்திற்கு எதிர்காலத்தில் கிட்டுமா, அல்லது தீபம் தனது இன்றைய ஸ்தாபிக்கப் பட்ட இந்த ஒரிஜினலிட்டியை என்றைக்கும் காத்துக் கொள்ளுமா என்பது அதன் ஏகச்சக்ராதிபதிக்கே வெளிச்சம்) ஆனுல் "எழுத்து'க்கு முன்னேடி தமிழில் எழுத்துதான். இம் மூன்று பத்திரிகைகளைப் பற்றிய பரிசிலனைக்கும், இந்த அடிப்படை மனதிலிருப்பது முக்கியமாகும். உருவமும் நோக்கமும் வேறுபட்ட இப்பத்திரிகைகள் 1965ல் தான் ஏக காலத்தில் செயல்பட்டிருக்கின்றன. அதனுலேயே 1965 ல் இவைகளின் பணி குறித்த மதிப்பீடு தனி முக்கியத்துவம் பெறுகிறது. இனி இப் பத்திரிகைளின் பல் வேறு அம்சங்களையும் தனித் தனியே கவனிப்போம்.

தாமரைக்கு அட்டை இருக்கிறது. ஆனுல் அதில் அலங்காரமோ கவர்ச்சியோ தேவை எனப் படவில்லை. தீபத்திற்கோ உள்ளே இருக்கும் விஷயத்தையே கொச்சைப் படுத்திக் காட்டத்தக்க அளவுக்கான கவர்ச்சி அட்டைக்குத் தேவைப்படுகிறது தீபம் சோதனை முயற்சியிலிறங்கியிருக்கிறதோ என்னவோ? அட்டைப் படத்திற்கு. ஒன்று சொன்னுற் போல மலையாள சஞ்சிகைகள் அனைத்தும், குழந்தைகளுக்குக் கொடுக்கும் தனி முக்கியத்துவத்தை, தீபம் கவனிக்க வேண்டும் எனக் கூறத்தோன்றுகிறது எழுத்துக்கோ, அட்டையே தேவைப்பட வில்லை- சமீப காலம் வரை. இப்போது ஒரு சட்டை (அட்டை இல்லை) மாட்டிக் கொண்டுதான் எழுத்து வருகிறது; "இனி கடைகளில் இடைக்கும்" என்ற அறிவிப்புடன் இந்தச்

சட்டையையும் மாட்டி விட்டிருப்பதைப் பார்த்தால் கடைகளில் கிடந்து கொஞ்ச நாட்களுக்கு தூசி தாங்க வேண்டுமென்பதற்காகத் தானோ என்று தோன்றுகிறது. எது எப்படிப் போனாலும் எழுத்தின் பக்கங்கள் சேதமாகாமல் இருக்க இந்தச் சாட்டை பாதுகாப்பாகத்தான் இருக்கிறது.

தலையங்கங்களைப் பொறுத்தவரை எழுத்து தவிர மற்ற இருபத்திரிக்களைிலும் உயிரே இல்லை. அச்சுக்குக் கொடுக்கும்போது ஏதாவது தலையங்கம் என்று ஒன்று வே ண் டு மே என் ற கடன் கழிப்பு வேலையைத் தான் தாமரை தலையங்கங்கள் பளிச்சென்று காட்டுகின்றன. ஒரு இலக்கியப் பத்திரிகைக்கு. அதுவும், ஒரு வழிகாட்டும் இலக்கியப் பத்திரிக்கைக்கு எழுதும் தலையங்கம் என்ற உணர்வே இல்லால் தாமரை தலையங்கங்கள் இருக்கின்றன. தீபத்திலோ அதன் படைப்புக்கள் பெற்ற பாக்கியத்தை தலையங்கங்கள் பெற வில்லை. முதலில் வெளி வந்த ஒரு சில தலையங்கள் விதிவிலக்கானவை. கி. வா ஜ. வையும், மற்ற வியாபாரப் பத்திரிகைகளையும் முன் மாதிரியாகக் கொள்வதால் பெரிய மனிதர் பாணி தான் தோன்கிறுறதே தவிர எழுத்தில் உணர்வில்லை. உயிரில்லை. 'நான் பெற்ற பிள்ளைகள் அத்தனையும் தங்கம்'' என்ற பாட்டி பேத்தலைப் போல, யார் யாரோ எழுதியதற் கெல்லாம் தீபத்தில் பிரசுரிக்கப்பட்டு விட்டது என்றே ஒரே காரணத்திற்காக அட்சதை தெளிப்பதுதான் எடிட்டரின் வேலையாக இருக்க வேண்டும் என்பதில்லை அல்லவா?

படைப்பு என்று எடுத்துக் கொ ண் டா ல் எழுத்துக்கு அது விருந்துச் சாப்பாடாக இருக்கிறது. எப்போதாவது அத்தி பூத்தது போல் ஒன்று! கேட்டால் சோதனை முயற்சிகளுக்குத் தான் எழுத்தில் இடம் என்கிறார் சி. சு செ. ஆனால் எழுத்தில் இதுவரை எத்தனை சோதனை முயற்சிகள் எந்தெந்த புதுமையுடன் வந்துள்ளன என்பதை செல்லப்பாதான் அலசல் திறாய்வு செய்ய வேண்டும். எழுத்துக்கு படைப்புதவிர்த்த வேறு துறையில் தீவிர க வ ன ம் இருப்பதால் அதைப் பாதிக்கும் அளவில் படைப்புத் துறை நோக்கிப் பாய வேண்டியதில்லை தான். புதுக் கவிதைகள், பலகாரங்களாகத்தான் இருக்க முடியுமே தவிர பந்தி போஜனமாகி விட முடியாது தாமரையில் பெரும்பாலான படைப்பாளிகளின் சாதனை சிறுகதையில் தான் இருக்கிறது. தாமரையில் சிறுகதை கவிதைப் படைப்புக்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் இன்றைய இலக்கிய உருவின் ஜாபவனாகத்திகழும் நாவலுக்குக் கொடுக்கப் படவில்லை. எடிட்டிங் கொள்கையின் விளைவா, எழுத ஆள் இல்லாக் குறையா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம் தாமரையின் தரத்திற்கேற்ற நாவலைப் படைக்க ஆள் இல்லை என்பது ஒரு சவால்தான். படைப்பைக் கை விட்டு விட்டது ரகுநாதனின் பேனா, மலடாகி விட்டதோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. இந்தத் தேவையை மொழி பெயர்ப்பு நாவல்கள் மூலம் ஓரளவு நிறைவு செய்ய முயன்றிருக்கிறது தாமரை, மொழி பெயர்ப்புக்களுக்கான நோக்கம் வேறாகையால் சுய படைப்பில், நாவல் துறையில் காணப்படும் வரட்சிக்கு அது ஈடாக முடியாது. ஆனால் தீபம் சுய படைப்பில் முன் நிற்கிறது. குறு நாவல்களும், பார்த்தசாரதியின் சரித்திர, சமூக நாவல்களும் தீபத்தின் தரத்திற் கேற்ற சாதனைகள் தான். ஆனால் தீபத்தில் பார்த்தசாரதி தவிர மற்றவர்களின் நாவல்களும் கூட வெளி வருமா என்ற நம்பிக்கையை வாசகர்களுக்கு இனி மேல் தான் அது ஏற்படுத்த வேண்டும்.

மொழி பெயர்ப்பு ஒரு மொழிக்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது ஆனால் இதை தாமரை உணர்ந்த அளவு தீபமோ, எழுத்தோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. 65 முடிந்த 66 ல், எழுத்தில் அ. இ. எ. மகாநாட்டுக்குப் போய் வந்த வேகத்தில், சி. சு செ இத் துறையில் நல்ல ஆரம்பம் செய்திருக்கிறார். தீபத்தைப் பொறுத்தவரை 65ல் ஏமாற்றம் தொனித்த போதிலும் 66ல் நம்பிக்கை பிறந்திருக்கிறது.

கட்டுரை இலக்கியம் தீபத்திலும் தாமரையிலும் சம முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆனால் எழுத்தில் கட்டுரை இலக்கியப்பகுதி பூஜ்யம் தான். எழுத்தில் தற்போது செய்யப்படுவது ஆய்வுகளும், விமர்சனங்களும்தான். படைப்புத் திறன் உள்ளிட்ட கட்டுரைகளாக அவை ஆக மாட்டா. சக்தியுள்ள இந்த இலக்கிய உருவத்தை அலட்சியப் படுத்துவது, இருபதாம் நூற்றாண்டு எழுத்துக்கு இலக்கணம் வகுக்கும் கடினப் பொறுப்பை ஏற்றுள்ள எழுத்துக்கு ஏற்புடையதல்ல. தீபமும் எழுத்தும் கட்டுரைப் பகுதியை படைப்பாற்றல் உள்ளிட்டவைகளாக வளர்க்கும்

---

## படிகள்

**ச. ச. குமார் 'வான்முகில்'**

படிகள்—மாடிப் படிகள் பழக்கமானவை
தான்
ஆனால் இருட்டு...
விளக்கு கொண்டு வர சோம்பல்.
சுறுசுறுப்புக்கு நான் என்ன எறும்பா ?
இருட்டில் ஏறினேன். இருக்கு ஒரு படி இன்
னும்
என நினைத்து காலை வைத்தேன்
அங்கே இல்லை படி.... சமதரை.

தொப்பென காலை வைத்த அதிர்ச்சி.
பழக்கமாயினும் இனி இருட்டில் விளக்கு
வேண்டும்
வேண்டாம்- நான்தான் மாடி வந்தாயிறறே
பார்த்துக் கொள்ளலாம் இறங்கும்போது.
இறங்குவதெங்கே? தள்ளி விடுவார்கள்.
மற்றவர்- பாவம், பாவமென்ன?
வரட்டும் விழட்டும், எனக்கென்ன ?

திறன் கொண்டிருக்கின்றன் என்ற நம்பிக்கை இருக்கிறது

இலக்கிய விமர்சனத்தைப் பொறுத்தவரை, எழுத்து தமிழில் ஒரு சகாப்தத்தை உருவாக்கிய பெருமை உடையது. வருங்கால விமர்சன உலகிற்கு ஒரு சொந்த இடத்தை அமைத்துத்தந்ததற்காக, அல்லது விமர்சகன் தன சொந்த இடத்தில் நின்றுதான் பணியாற்ற வேண்டும்... முடியும்.. என்பதை நமக்குப் புரிய வைத்ததற்காக, எழுத்து தமிழகத்தில் என்றும் நினைவில் கொள்ளப்படும். தாமரை விமர்சனத்திற்கு மூன்றாவதான இடத்தை அளித்திருக்கிறது. இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனப்பகுதியின் முக்கியத்துவத்தை தாமரை உணர்ந்துள்ளதையே இது காட்டுகிறது. ஆனல் தீபம் விமர்சன ரீதியில் எதையும் அணுகவே இல்லை. கட்டுரைகளுக்கும், தனி மனித உணர்வுப் பிரதிபலிப்புகளுக்கும் அளிக்கும் இடத்தைப் பங்கிட்டாவது இலக்கிய ரீதியான விமர்சனத்திற்கு தீபம் இடம் அளிக்க வேண்டும். "இலக்கிய ரீதியான விமர்சனமே, படைப்பாளிகளின் மேல் இரக்கமற்ற முறையில் தொடுக்கப்படும் படையெடுப்பு' என்றும் 'விமர்சிக்கப்படும் அளவுக்கு தமிழ் இலக்கியம் தகுதி பெறவில்லை" என்றும் கூறும் ஜெயகாந்தனை திரைப்படத் தயாரிப்பாளர்களின் மேல் ரத்தம் குடிக்கும் அட்டை வேலை செய்ய விட்டிருப்பது தமிழ்த்திரைப் படத்திற்கு வந்து விட்ட தகுதியினலா என்று கேட்க வைக்கிறது. தீபத்தின் இந்தப் பக்கங்களை ஜெயகாந்தன் இலக்கிய சம்பந்தமான சிந்தனைகளுக்குச் செலவிடுவதே முறை. இந்தவிஷயத்தில் இரண்டு அபிப்பிராயம் இல்லை என்பதை வாசகர்களை அணுகிப் பார்த்தாவது புரிந்து கொள்ளலாமே!

கடைசியாக குழந்தைகள் இலக்கியம்! இதைக் குறிப்பிடாவிட்டால் எடிட்டிங் பற்றிய பரிசீலனை முற்றுப் பெருது. தாமரை ஒன்றுதான் இவ்விஷயத்தில் தனக்குக் கடமைப் பொறுப்பு இருப்பதைக் காட்டிக் கொண்டுள்ளது: தீபத்தின் தொண்டு இவ்விஷயத்தில் பூஜ்யம்தான் வேண்டாம் என்றே இப்பகுதியை விட்டிருந்தால் நிச்சயமாக அது பெரிய மனிதர்களின் பத்திரிகையின் தரத்தைக் காத்துக் கொள்ளும் முடிவுதான். ஆனல் வளர்ச்சியடைந்தவர் களுக்கானதல்ல என்று மட்டும் கூற வேண்டும். எழுத்தும் விலக்கில்லை. "எழுத்தில் குழந்தைகள் இலக்கியமா? என்று நெற்றியைச் சுருக்க தேவையில்லை. குழந்தைகள் இலக்கியம் பற்றிய முறையான ஆய்வு இல்லை என்ற குறையை தட்டிக் கழிப்பதற்கில்லை, குழந்தைகள் இலக்கியம்தான் எதிர்காலத்துக்கான வளரும் வாசகனின் தரத்தை நிர்ணயிக்கக் கூடிய தாகையால் யாராவது வளர்த்துவிட்ட வாசகன் எனக்கு வேண்டும் என்றநிலையை மேற்கொள்வது எப்படிப் பார்த்தாலும் சரியாகாது. பாரதத்தின் நிர்வாகச்சுமையை தலைமேல் கொண்டிருந்தபோதுகூட நேருஜி குழந்தைகளுக்காகவும் சிந்திக்கத் தவறியதில்லை. இந்தச்சின்னப் பத்திரிகைப் பொறுப்பை வைத்துக் கொண்டு, குழந்தைகளைப் பற்றி நினைக்க நேரமில்லை என்று சொன்னல் கேட்பவர்களுக்கு அடக்கமற்றதாகத் தோன்றக் கூடுமல்லவா!

என். எஸ். கே. ஒரு திரைப்படத்தில் "பணத்தை எங்கே தேடுவேன்" என்று தலையில் கை வைத்த நிலை தான் நாடக இலக்கியத்தை நினைக்கும்போது ஏற்படுகிறது. யாரும் படிக்கிறார்களோ இல்லையோ என்ற கவலையின்றி கவிதைகளுக்கு ஓரிரு பக்கம் ஒதுக்கத் தயங்காத இம்மூன்று பத்திரிகைகளும் நாடக இலக்கியம் என்று ஒரு பகுதி இருப்பதாகவே கருதிப் பார்க்கவில்லை. எழுத்திலாவது நாடக இலக்கியம் பற்றி சில சர்ச்சைகள் காணப்பட்டது தாமரையிலும் தீபத்திலும் அச்சாயலே இல்லை. மலையாளத்தில் வெளிவரும் அத்தனை சஞ்சிகைகளிலும் இதழ் தப்பாமல் ஒரு ஓரங்க நாடகமாவது காணப்படுவதால் தான். இந்தியாவிலேயே மலையாள நாடகங்கள் தனிச் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன. தமிழில் நாடக இலக்கியத்தின்பால் காட்டப்படும் அலட்சியம் விரல்களில் ஒன்றை சூம்பிப்போக விடத்துணியும் விவேகத்திற்கு மட்டுமே சாட்சியமாக இருக்க முடியும்.

---

இரண்டு கவிதைகள்

# ஆசை

### த. நா. சாமிநாதன்

ரோஜாப்பூ ஒன்று ஜோராய் பூத்திருந்தது
நேராய் பறித்தெடுக்க வாகாய் கை போச்சு
பறித்து என்ன செய்வாய்?
பாசத்துடன் முகர்ந்திடுவேன்
எத்தனை நாழி முகர்ந்திடுவாய் எத்தனைநாழி?

# மனம்

கடையில் வாங்கினேன் காமிரா
கருத்தைக் கவர்வதை கணக்காய் பிடிப்பேன்
சுருள் தீர்ந்து போனல் சுவை குன்றிப் போமே,

கடவுள் கொடுத்தாரே காமிரா
கருத்தைக் கவர்வதோ நல்ல கருத்தை குலைப்பதோ,
சுருள் தீர்ந்து போகுமென்ற சிந்தனை யேன்?
பிடித்துவை!

(126ம் பக்கத் தொடர்ச்சி)

மௌனியின் 'அழியாச் சுடர்' ரும் பிரபஞ்ச 'கானம்' மும்தான் சிறந்தவை என க.நா.சு.வுக்குப் படுவதன் காரணம் அவ்விரண்டிலும்தான் இந்த பிரமிக்க வைக்கும் கவித்வம் இருக்கிறது என்பதாலேயா என நினைக்கிறேன். இவ்விடத்தில் வாசகர் அழியாச்சுடர் கதையில் கதாநாயகன் இரண்டாவது தடவையாக கோயிலுக்குப் போகும் இடத்தில் கர்ப்பக்ருக வர்ணனையைப் படித்துப் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் இலக்கியத்தில் பொறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டிய வரிகளுள் சில அவை காரணம் அந்த பிரமிப்பு "உலகின் கடைசி மனிதன்.. அநந்தத்திலும் அவியாத ஒளியை" என்று வரும் வரிகளுள் எந்தச் சொல்லில், சொற்களில் ரகசியம் இருக்கிறது? மௌனியினாலேயே அந்த விஷயத்தைப்பற்றி ஒன்றும் சொல்ல முடிவதில்லை.

"எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?" என்ற மௌனியின் கேள்வி; அங்கும் இந்தப் பிரமிப்புத்தான். இந்த பிரமிப்பை ஆசிரியன் நம்மிடம் ஊட்டுவது எவ்வகையில் பண்டித அளவுகோல்களின்படி, அதாவது 'நமது விமர்சன அளவுகோல்' — 'நமது விமர்சன அளவுகோல்' என்று உதட்டளவில் விஷயம் அறிந்த க.நா.சு. போன்றவர்வரை சொல்லிக்கொள்கிறார்களே? அந்த 'நமது' அளவுகோல்களின்படிக்குப் பார்த்தால் நம்மை நிழல்களுக்கு ஒப்பிடுவதிலோ, 'மில்க்கி வே'யை வெள்ளி நதிக்கு ஒப்பிடுவதிலோ 'உவமை நயம்' (நமது அளவுகோல்களிடையே ஒரு பிரயோகம்) பிரமாதமாக இல்லை.

மேல்நாட்டு முறைகள் கவியின் தீண்ட முடியாத அம்சங்கள்வரை ரசிகனை இட்டுச் செல்ல முயன்றிருக்கின்றன எவ்வளவுக்கு எவ்வளவு தேடி அடைய முயல்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நம் தேடுதலுள் அகப்படாத மர்ம அம்சங்கள் தான் கவியின் பெருமைக்கு உரியவை என்ற ஸ்திர உணர்வு கிடைக்கும். கவியில் ஒருமன இழப்பு நேரும். இந்த மன இழப்பின் வசப்பட்டுத்தான் நான் ஆரம்பத்தில் சொன்ன வரிகள் என் மனசில் எதிரொலித்திருக்க வேண்டும். ஆக,

'உவமை நயம்' அல்ல நான் எடுத்துக் கொண்ட வரிகள் என்னைப் பிரமிக்க வைத்ததின் ரகசியம். ஒன்றும் 'பிரமாத' (அதாவது அதீத) உவமைகள் அல்ல அவை.

இவற்றை, வேறுவகை அளவைக் கொண்டு பார்த்தால், சிறந்த 'படிமங்கள்' (images) எனலாம். 'பொய்த்தேவு' நாவல் முழுவதுமே ஒரு படிமம். நான் படித்து பத்து வருஷத்துக்கு மேலிருக்கலாம். ஆனால் வரண்ட பாலைவன வெக்கை, ஒரு கோடைகாலத்து மத்தியான உஷ்ணம் என் நினைவில் இன்னும் அந்த நாவலின் ஞாபகமாக நிற்கிறது. நாவலை மறந்து விட்டேன். ஆனால் அதன் படிமம் நிற்கிறது. எத்தனையோ நாவல்கள் கதைகளிடையே இது வேறு வகையாக, ஒரு கசப்பான தோல்வியின் ஞாபகம்போல் நிலைத்து விட்டது. இந்த நிலையேற்றின் காரணம், நாவலின் படிம சக்தி 'இமேஜரி' என் மனசில் இப்படி நிலை நிற்பது அந்த நாவலின் 'கதை' அல்ல. கதையின் பெரும் பாகங்கள் மறந்து போய்விட்டது.

இவ்விடத்தில் வாசகர் என்னுடன் ஒத்துழைத்தால்தான் நான் சொல்ல முயல்வதை அறியலாம். சுரணையுள்ள எந்த வாசகருக்கும் மனசில் சில குறிப்பான ஆசிரியர்கள், அந்த டாஸ்டாவ்ஸ்கி மாதிரியானவர்கள் தைத்து விட்ட முள்ளுகள் இருக்கும். படித்தது முழுக்க நினைவில்லாவிட்டாலும் காஃப்கா — அல்லது சில புதுமைப்பித்தன் கதைகள் அவரது 'துன்பக் கேணி' ஆமாம் வாசகருக்கும் அப்படி அனுபவங்கள் இருக்கின்றன. இந்த மாதிரி சக்தி, படிம சக்தி, The Milky Way is like a silver river என்ற வரியில் "எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?" என்ற வரியில் இருக்கிறது.

அவ்வரி எனக்கு பிரமிப்புக் கொடுத்ததின் காரணம் கலைஞனின் மனப்பண்பு — அதாவது அவனைப் பாதித்த சில வேகங்களின் விளைவு — அவ்வரியில் வெளியாவதுதான் தெளிந்த இரவில் நீங்கள் 'மில்க்கிவே'யை பார்க்க முயன்றிருப்பீர்களோ என்னவோ, அது பிரபஞ்சத்தின் மௌனமான எல்லையின்மையை கண்களுக்கு கோடிட்டுக் காட்டுவது. தற்கொலை செய்யப் போகிறவனுக்கும் சாவை நோக்கித் தன்னையே உருட்டி விடுகிற போது தனது தூசித் தன்மையின் முன்னிலையில் ஒரு அகண்டத்தின் பிரக்ஞை எழுகிறது. சுமார் பதுதுப் பதினைந்து வரிகளேயுள்ள அசகவிதையில் இந்த ஒருவரிதான் கவியின் தற்கொலை எண்ணத்தை ஒரு பொருட்டு விஷயமாக ஒதுக்கி விடவைப்பது. இருப்பும் இன்மையும் இந்த அகண்டத்தின் முன் ஒன்றுதான் என...

ஆம், பிரபஞ்ச வெளியின் முன் என் தூசித் தன்மையை அவ்வரி எனக்குப் புலப்படுத்தியிருக்கிறது. அதுதான் என் பிரமிப்பின் காரணம். இப்பவும் ஞாபகம் இருக்கிறது. ஒரு நண்பரும் நானும் அக்கவிதையைப் படித்துவிட்டு வெளியே வந்து வானை அண்ணாந்து பார்த்து மௌனமாக நின்ற விநாடிகள்...

"நாம் சாயைகள்தாமா? எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?" நாம் சுவாதீனமான வியக்திகள் அல்ல, சுவாதீன சக்தியோடு இயங்கும் வேறு எவற்றையோ பின்தொடரும் நிழல்களா நாம்? ஆமாம், எந்த தீவிர நிலைமையில் நாம் நமது புத்தியின் இசைவுக்கு நடந்திருக்கிறோம்? யாவற்றுக்கும் மேலாக நாம் எமது இசைவுடனா பிறந்திருக்கிறோம், அல்லது முடிவெய்துகிறோம்? சங்கிலிபோல தொடரும் ஆழ்ந்த வாழ்க்கைப் பிரச்னைகளை எழுப்பிவிடுவது இந்த மௌனி வரி, இந்த ஆழ்ந்த பிரச்னைகளின் வேகம் தான் இங்கே பிரமிப்புத் தருவது.

இவ்வரிகளின் அடியில் இயங்குவதுதான் சிருஷ்டி கர்த்தாவின் மனநிலை. இம்மனநிலையை

அவன் வாழ்க்கையைப் புரிந்து கொண்ட வகை என்று பச்சையாகச் சொல்லலாம்.

ஆனால் வாழ்க்கையைப் 'புரிந்து' கொண்டா எழுத வேண்டும்? புரிந்து கொள்ளாமல் கலை பண்ண முடியாதா என்று கேட்கலாம். வாழ்க்கையைப் புரிந்து கொள்ளா நிலையில் வெறும் பயிற்சி எழுத்தாகத்தான் எவ்வகை எழுத்தும் இருக்கும். 'இல்லாத இடை' போன்ற அதீத உவமைகள் பிறக்கும். அதாவது வாழ்வை விட்டு கற்பனை தனித்தியங்கும். வாழ்க்கையைப் புரிந்து கொள்ளல் எனும்போதும் இதுதான் வாழ்வின் அர்த்தம் புரிந்துகொள்ளப்படுவதுக்கு என்று தொனிக்கிறது. அப்படியல்ல, சுரணையுள்ள இதயம், சிருஷ்டி சக்தியுள்ள இதயம் வாழ்வினால் பாதிக்கப்பட வேண்டும் என அர்த்தம் கொள்ளுங்கள். இப்பாதிப்புத்தான் முக்யம். ஆனால் அவனவனின் மன ஆழம் விஸ்தரிப்பு, அறிவின் பகைப்புலம் தீட்சண்யம், யாவற்றுக்கும் மேலாக விருப்பு வெறுப்பு. இவைக்கேற்ப இப்பாதிப்பு ஒவ்வொரு வகையில் கலையுள்ளத்தில் சமைகிறது. சமைந்த வாழ்வை அவன் புரிந்து கொண்ட அளவு வாழ்வாகக் கொள்கிறோம்—அது கலைப் படைப்பில் வெளிப்படும்போது பலவித அளவை கட்டும் — தத்துவ மனவியல், சமூக அளவை களுக்கு—உட்பட்டு ஆசிரியனின் தீட்சண்யம் முதிர்ச்சிபற்றி நிதானிக்க உதவுகிறது.

இப்படி ஒருத்தன் புரிந்துகொண்ட வாழ்க்கை தான் அவனுக்கு படைப்பு வேகத்தை அளிக்க முடியும், அவனை சிருஷ்டி இயக்கத்திற்கு உட்படுத்த முடியும், எழுத வேண்டியது தவிர்க்க முடியாத ஓர் காரியமாக இயல்பின் வசப்பட்டுப் பிறப்பது அப்போதுதான். இந்நிலையில்தான் தன் முனைப்பை மீறின வகையாக கவி இயங்குவது. அவனே அறியாமல் அவனை வெளியீட்டு சக்திகள் இயக்குவது.

வெளியீட்டு சக்தியினால் இயக்கப்படும் மனசுக்கு கிடைக்கிற உந்நத நிலை, வாழ்வின் பரிச்சயம் அளித்த முதிர்ச்சி அவனை எழுத வைக்கிற போது, அவனது வெளியீட்டு இயக்கம் தனித்த சில தன்மைகள் பெறுகின்றன. இதை அவன் எழுத்தில் உணர்ந்து பரவசப்படுகிறோம். கனவு அல்ல அந்த 'தன்மை' ஆனால் மனசின் சபலங்கள் யாவற்றையும் மூச்சடக்கி விடுகிற வாழ்வின் நிதர்சனசக்தி எனவேண்டும். சிறுபிள்ளைத்தனமான சபலங்களுள் தப்பித்துக்கொள்ள விடாமல் மனசை ஈர்த்து ஒரு தவிர்க்க முடியாமையை வாழ்வின் அம்சங்களுள் உணர்த்துவது. இதை தான் படைப்பாளியின் மனநிலை எனவேண்டும், அதாவது படைப்போடு அவன் சம்பந்தப்பட்ட அளவுக்கு. மனிதப்பிராணியாக அல்ல.

மனிதப் பிராணியாக, அவன் கொஞ்சம் சபலபுத்திக்காரன். நிறைவேற முடியாதவற்றை நிதர்சனத்துக்குப் புறம்பானதை அங்கீகரிப்பவன் என்பது தவறல்ல, ஆனால் அவனது இயல்பான நொய்மை இருக்கிறது. அதே நொய்மையினால் தான் அவன் வாழ்வின் நிதர்சனம் எவ்வளவு ஆக்ரோஷமானது என பூரணமாக அதால் பாதிக்கப்பட்டு உணரவும் முடிகிறது.

இவ்வளவும் அறுவை வேலை. இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். இதுதான் என்று சிருஷ்டி மனநிலையை நான் சுட்டிவிடாமல் வேறு வகைகளிலேயே அதுபற்றிச் சொல்ல முயன்றிருக்கிறேன். கலைஞனால் பிரமிப்படைய முடிகிறது. அதிசயிக்க முடிகிறது. கேள்விபோட முடிகிறது. அதிசயிப்பு, கேள்விபோடல் இவைதான் கலையின் உந்நதமான காரியம் என நினைக்கிறேன். இந்த பிரமிப்பு, அதிசயம், கேள்விகள் என்பவற்றின் இயக்கமதான் படைப்பு மனநிலை.

---

## முகமூடி

### சி. மணி

பூச்சிக்கும் வரிப்புலிக்கும்
    நச்சுக்கும் வழலைக்கும்
அகம் விட்டுப் புறமுற்றும்
    நிறமாற்றம் விளைவித்து
முகமூடி களைந்தணிந்துக்
    களைந்தணிந்துச் சலித்தோய்ந்து
மனைத் தலைவன் முகமூடி
    எடுத்தணிந்து மனையேகி,
குறை பொழுதை நடித்தோடி
    உடையுடனே முகமூடி
களைந்துவிட்டு வெறு முகமாய்ப்
    படுக்கையில் இருந்தபடி,
பெட்டியிலும் பரணையிலும்
    தொட்டியிலும் ஒதுக்கியதைச்
சரிபார்த்துப் பிரித்தொட்டிச்
    சுய உருவை உருவாக்கும்
முயற்சியிலே தடுமாறி
    வழி தேடி விழித்திருக்க;
மனைவி படுத்ததை
    மேனி உணர்த்தவும்
என்னைச் சிதைக்கும்
    பொழு தொரு கூத்தைச்
சொல்லியபடி நான் திரும்ப,
    முந்தியவள் குறைபடிக்கக்
காதலுறும் கணவனின்
    பாக மேற்று மயங்கினேன்
தூக்கத்தில்; இப்படியே
    ஆளுமை தேய்ந்துவிடும்
காண்கின்ற வான் நிறமாய்.

தமிழ் சிறுகதைக்கு பிதா, தமிழில் புதுப் பார்வை விமர்சனத்துக்கு வழிகாட்டி, கம்பனையும் திருக்குறளையும் இங்கிலீஷில், சிறப்பாக மொழி பெயர்த்த பேராசிரியர் வ. வே. சு. இன்னும் சந்திரகுப்த சரித்திரம், புக்கர் வாஷிங்டன் நெப்போலியன் குறுந்தொகை இந்திய சரித்திரம் குருகோவிந்தசிம்மன் ஆகிய நூல்களை படைத்தவர். அவரது ராஜகோபாலன் கடிதங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை அத்தனைக்கும் மேலாக தனித்தன்மை வாய்ந்த ஒரு பாணி தமிழ் நடையை தமிழுக்கு தந்தவர்.

இவ்வளவு சாதனை காட்டி உள்ள ஒரு தற்கால தமிழ் இலக்கிய பெர்ஸனாலிட்டி'யைபாரதி, பாரதிதாசனைப்போல தன் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டியது தமிழகத்தின் கடமையாகும்,

தமிழ்நாடு வாசகர் பேரவை

எழுத்தரங்கம் உள்பட குறிப்பிட்ட எழுத்தாளர்கள் வாசகர்கள் சந்திப்புக் கூட்ட நோக்கங்களைவிட கூடுதலான ஆசையுடன் மதுரையில் 'தமிழ் நாடு வாசகர் பேரவை' என்ற அமைப்பு மதுரையை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது சங்கம் இருந்த மதுரையில் இப்போது பல்கலைக்கழகம் அமையப் பெற்ற ஒரு வாய்ப்பு தந்த உந்துதலின் விளைவே இது என்று கருதத் தோன்றுகிறது. தமிழ் நாட்டின் இலக்கிய ரசிகர்கள் மற்றும் வாசகர்களை ஒன்று சேர்த்தல், ரசனைத் திறனை வளர்த்துக் கொள்ளல், சிறப்பான படைப்புகளையும் படைப்பாளிகளையும் கவுரவித்தல், படைக்கப்பட்ட இலக்கியங்களின் புது மற்றும் பொதுத் தன்மைகளை வரையறுத்து வரிசைப்படுத்துதல் ஆகியவை வாசர் பேரவையின் திட்டங்கள் அவை சரியானதே. ஆனால் நடைமுறையில் செயல்படும் விதத்தைப் பொறுத்துத் தான்சாதனை இருக்கும். மலிவுப் பிரசுரவெளியீட்டு விழா, பாராட்டுக் கூட்டம் பொன்னாடை போர்த்தல் கேடயம் அளித்தல் இத்யாதிகளே தமிழகத்தின் இலக்கிய நிகழ்ச்சிகளாக கருதப்பட்டு மலிந்து கிடக்கிற இந்த நாளில் பேரவையும் போகப்போக அந்த மாயையில் சிக்கிக்கொண்டு விடக் கூடாதே என்று எழும் நினைப்பை வெளியிடாமல் இருக்க முடியவில்லை. வருகிற ஜுலை 10-ம் தேதி பேரவை திட்டமிட்டிருக்கும் தமிழில் விமர்சனப் பார்வைகள் என்ற கருத்தரங்கம் நல்ல புது விதமான ஆரம்பமே. பேரவையின் தலைவர் சி கனக சபாபதி கல்லூரி விரிவுரையாளர் விமர்சகர். செயலாளர் ஏ இப்ராஹீம் வத்ராயிருப்பு இலக்கிய வட்டத்தை உருவாக்கி இயங்க வைக்கிறவர், நல்ல வாசகர் இந்த இருவரிடமும் நாம் எதிர்பார்ப்பது வீணாகாது என்ற நம்பிக்கை கொள்ளலாம்.

எழுத்தரங்கம்

வட்டத் தொட்டி, வெள்ளி வட்டம், இலக்கிய வட்டம், வாசகர் வட்டம் இவற்றின் தொடர்ச்சியாக, ஆனால், தெளிவான திட்டத்துடன் 'எழுத்தரங்கம்' என்ற பெயரில் புது அமைப்பு உருவாகி, அதன் ஆரம்பக் கூட்டம் சமீபத்தில் நடந்தது. சி. சு. செல்லப்பா, தி க. சிவசங்கரன், தி. சோ. வேணுகோபாலன், ந. முத்துசாமி நெ. து. சீனிவாசன் சி. அ. சச்சிதானந்தம் ஆ. ம ராமச்சந்திரன், கந்தசாமி ஜோதி ராமலிங்கம். கிருஷ்ணசாமி வி. எஸ். குருசாமி சு. சங்கர சுப்ரமண்யன் முதலியோர் கலந்து கொண்டனர். இதை ஒரு அமைப்பு என்பதைவிட, ரசனையையும் விமர்சனப்பார்வையையும் விரிவாக்கி வளர்க்கும் இயக்கம் என்றே சொல்லலாம். தமிழ் மொழி, பிற மொழி நூல்கள், ஆசிரியர்கள் பற்றிய விளக்கங்கள், விமர்சன உரைகள். மொழி பெயர்ப்புக்கள், இலக்கியவாதிகளுடன் தனிப்பட்ட கருத்துப் பரிமாறல்கள் முதலிய பல வழிகளிலும் திட்டமிட்டுச் செயல்படுவதென்று தீர்மானிக்கப்பட்டது இன்று தமிழ் நாட்டின் பல துறைகளிலும் தேக்க நிலை விரவியிருப்பது பற்றி சுட்டிக்காட்டப்பட்டது மல்லாமல் விஞ்ஞான ரீதியான, காரண விளக்கம் செறிந்த அணுகல் குறைந்திருப்பதாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது இலக்கியத் துறையில் பிற துறை ஊடுருவல் விழுந்திருப்பது குறித்தும் பிரஸ்தாபம் வந்தது, சுய சிந்தனைக்கும், பயம் இல்லாத கருத்து வெளியீட்டுக்கும் எழுத்தரங்கம் இடம் தரும் எனவும் குறிப்பிட்ட வழிக் குரலுக்கு மட்டும் வாய்ப்பு என்கிற அமைப்பு இடையாது எனவும் தெளிவாக விளக்கிக்கொண்டு, ஆக்க பூர்வமான செயல் முறைகளில் ஈடுபடும் உறுதியுடன் அனைவரும் கலைந்தார்கள் மாவட்டங்களில் உள்ள வாசகர் மன்றங்களுடன் தொடர்பு கொள்ளுவது பரஸ்பரம் உதவும் என்பதும் உணரப் பட்டது,

இந்த ஏட்டில்

இந்த ஏட்டில் வெளியாகி இருக்கும் சிருஷ்டி இயக்கம் என்ற கட்டுரையை எழுதி இருக்கும் தருமு சிவராமுவின் நுட்பமான ரசிகத் திறன், படைப்பு மனநிலையை அவர் ஆராயும் தோரணையில் காண முடியும். தமிழில் இன்று விமர்சனத் துறையில் ஈடுபட்டிருக்கும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களில் ஒருவரான அவர் இலங்கைத் தமிழர். மூன்று பத்திரிகைகள் என்ற கட்டுரையை எழுதி இருக்கும் ஏ. இப்ராஹிம் ஒருபக்க மனச்சாய்வு இல்லாமல் தமிழில் புதிதாகத் தோன்றி செயல்படும் மூன்று பத்திரிகைகளின் சாதனையை எடை போடுகிறார், பழசையும்

---

ஒரு அரிய வாய்ப்பு

**எழுத்து**க்கு மூன்றாண்டு சந்தாவாக

ரூ. 16/- செலுத்துபவர்களுக்கு

**சத்யாக்ரகி** என்ற என்சிறுகதை நூல் (ரூ.4).

அன்பளிப்பாக கிடைக்கும்.

தங்கள் சந்தாவை எதிர்பார்க்கிறேன்.

—சி. சு. செ

புதுமையும் சேர்த்துப் பார்க்கத் தெரிந்தவர்கள் தமிழில் ரொம்ப குறைவு. விமர்சகர் கனகசபாபதியின் மறுமலர்ச்சி இலக்கிய ஆய்வு இரண்டையும் பார்க்க முடிந்த பார்வையை காட்டும். பிறமொழிப் படைப்பாளிகளின் படைப்பும் சாரத்தும் நமக்கு தெரிந்தாக வேண்டும். மலையாள கவி ஜி. சங்கரகுருப் எழுதியுள்ள 'கவிதை குறித்து என் தீர்வு' கட்டுரை இருக்கிறது.

இன்றைய முன்வரிசை புதுக்கவிதைக்காரர்களில் சி மணி தி சோ, வேணுகோபாலன் இருவரது கவிதைகள் இந்த ஏட்டில் இருக்கின்றன. கி. அ. சச்சிதானந்தம் எழுதியுள்ள வெண்மலர்களையும் நீங்கள் முகர்ந்து பார்த்து அனுபவிக்கத்தக்கது. இன்னும் மு பழனிசாமி, ஹரி ஸ்ரீனிவாசன் ச. ச. குமார் (வான்முகில்) ஆகியோரின் கவிதைகள் இடம் பெறுகின்றன.

## உங்கள் காதுக்கு

### தமிழ்க் கவிஞர் பெருமன்றம்—பாரதியும், பாரதிதாசனும்

கவிஞர் சுரதாவைத் தலைவராகக் கொண்டு கடந்த ஏழு மாதங்களாக இயங்கி வருகிற தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் பாரதிதாசன் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. கவிஞர்கள் கூடி தங்களது முன்னோடி ஒருவனைக் கௌரவிக்க முற்பட்டது பாராட்ட வேண்டிய செயலாகும். சிறப்புக் கவியரங்கம், பரிசுக் கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவு என்று மூன்று வகைகளாக நிகழ்ச்சி பிரிக்கப்பட்டு, முதலாவதும் மூன்றாவதும் பாரதிதாசனைச் சுற்றியும். பரிசுக் கவியரங்கம் "வேற்றுமை" என்னும் தலைப்பின் மீதும் அமைந்தன.

பரிசுக் கவியரங்கம் இந்த மன்றத்தின் விசேஷ ஏற்பாடாக திட்டமிடப்பட்டு தனித் தலைப்புகளில் கவிபாடும் வாய்ப்பை இளம் கவிஞர்களுக்கு ஏற்படுத்தித் தருகிறது. மன்றத்தில் கூடியுள்ளோரே நீதிபதிகளாக மாறி, சீட்டு முறையில் சிறந்த கவிஞரைத் தேர்ந்தெடுப்பதும் புதுமையாகும். 'வேற்றுமை' போட்டியில் எட்டு கவிஞர்கள் பங்குபற்றியதில் மொத்தம் பதிவாகி கணக்கில் ஏற்கப்பட்ட சுமார் 170 வாக்குகளில் 85 பெற்று முதற் பரிசைப் பெற்றவர் இளஞ்சேரல் என்னும் கவிஞர். 34 பெற்று அடுத்த பரிசுக்குத் தகுதியானவர் வான்முகில் என்னும் கவிஞர். இதில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்றுண்டு. கவிஞர் வான்முகில் மற்றவர்களைப் போல நீட்டி முழக்கி மரபு வழிக் கவிதை பாடாமல் புதுக் கவிதை பாணியில் நறுக்கென்று தலைப்பைத் தொட்டு சில வரிகளை வழங்கினார். எட்டுப் பேருக்கு நடுவில் மக்களின் தீர்ப்புக்கு விடப்பட்டு, கணிசமான வாக்குகளுடன் இரண்டாவது பரிசை அவர் பெற்றிருப்பது புதுக் கவிதை இனி அறையை விட்டு அம்பலத்துக்கு வரலாம், வந்தால் செலாவணியாகும் என்கிற நம்பிக்கையை ஊட்டுகிறது.

அன்றைய விழாவிலே ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளில் கண்ட சில கருத்துக்கள் எச்சரிக்கையுடன் கவனிப்பதற்கு உரியனவாகும். பாரதிதாசனின் கவித்வ சக்தியை முன்வைத்து விளக்கி அவருக்கு பெருமை சேர்ப்பதைவிட, பாரதியை மீறிய ஒரு தனியிடத்தை அவருக்கு வாங்கிக் கொடுக்கும் ஆர்வமே தலைதூக்கி நின்றது. பாகதி போற்றிய மூவரைவிட பாரதிக்குத் தனியிடம் கொடுக்கும்போது காலச் சூழ்நிலை, கருவி மாற்றம் போன்ற பல காரணங்களை நாம் முன் நிறுத்துகிறோம். அப்படி பாரதிதாசனுக்கும் சிறப்பு உண்டானால் யாரும் வற்புறுத்தி வரவழைக்க வேண்டிய அவசியமும் இல்லை, மூடி மறைக்கும் முயற்சியும் பலிக்காது. மேட்டைவிட பள்ளத்தைப் பாடியவர், சாதிக் கொடுமையைச் சாடியவர் போன்ற பெருமைகளைப் பாரதிதாசனுக்குத் தனியாகச் சொல்ல வரும்போது தான் வாதத்திற்கு இடம் ஏற்படுகிறது. இந்த மாதிரி 'புரட்சி' விஷயங்களில் பாரதி முந்திக்கொண்டு முன்னோடியாக விளங்கியது மட்டுமல்ல, பாரதிதாசனைவிட நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் துணிச்சல் குரல் எழுப்பியதும் இலக்கிய சரித்திரத்தில் இடம் பெறப்போகும் முழு உண்மை. ரசனைச் சரக்கு என்பதற்கு அப்பால், கருத்து வேகத்திற்கு கவிதையைப் பயன்படுத்தியதற்காகத்தான் பாரதியே கனக சுப்புரத்தினத்தைக் கவர்ந்திழுத்து பெயர் மாற்றத்திற்குத் தூண்டியிருக்க வேண்டும். பாரதிதாசன் மறைந்த பிறகு அவர் புகழ்பாடும் உற்சாகத்தில் தெரிந்தோ தெரியாமலோ அல்லது வலிந்து திட்டமிட்டோ பாரதியோடு பாரதிதாசனை இணைத்து மோத விடுவது அவர்களுக்கோ நமக்கோ, புதுமைத் தமிழ் இலக்கியத்துக்கோ, மறுமலர்ச்சிக் கவிதைக்கோ பயன்தராது. ஆழம் நிறைந்த திருப்பத்தை — கருத்திலும் வடிவத்திலும்— கவிதைக்கு வழங்கிய பாரதியின் இலக்கிய அந்தஸ்தே முழுமையாகவும் நியாயமாகவும் கணிக்கப்படாத நிலையில், அந்தப் பணிக்குக் குறுக்கே பாரதிதாசனை இழுத்து விடுவது தாசனுக்குத் தாசகர்கள் செய்ய வேண்டிய காரியம் ஆகாது.

அன்றைய விழாவிலேயே, முகவை ராஜமாணிக்கம் பேசும்போது, இந்த விஷயத்தை உணர்ந்தவர்போல், சற்று வெளிப்படையாகவே பாரதியைப் பற்றிக் குறிப்பிட்டு கம்பன், வள்ளுவர் இளங்கோ மூவரையும் தன் காலத்தில் கொண்டுவந்து நிறுத்திய பாரதியைப்போல். பாரதிதாசன் தன் கவிதைகளில் பாரதியை உள்ளடக்கியதாகச் சொன்னது அழகான விளக்கமாகும். பாரதி வரிகளையும் பாரதிதாசன் வரிகளையும் எடுத்துக் கூறி ஒரே கருத்தைத் இருவரும் கூறிய விதங்களை தம் பார்வைக்கு விட்டதுதான் நியாயமான காரியம். வீண் சர்ச்சைகளில் காலத்தை விரயமாக்கியதற்கு தமிழன் வரலாற்றில் நஷ்டக் கணக்கு நிறைய உண்டு. புதிய தலைமுறைகள் பெருகி கவித்வ வளம் சேர்க்க வேண்டிய சமயத்தில் புதுக் குழப்பம் செய்து நம்மை நாமே இனியும் ஏமாற்றிக் கொள்வானேன்?

-சு. ச.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5.